Registered No. M. 878.

# பூர்ணசந்திரோதயம்.

**A Tamil Monthly Journal**

***Devoted to Theosophy, Religion, Science, Art and Civilization***

தொகுதி 5. 1914௵ ஜூலை௴ 15௳ ஆநந்த௵ ஆனி௴ 32௳ பகுதி 3

அ. ரங்கஸ்வாமி ஐயர், B. A., B. L., F. T. S., பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ. 2 தனிப்பிரதி அணா 4.

மதுரை:

விவேகபாநு அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

## பொருளடக்கம்.

## (CONTENTS)

பக்கம்.

1. தற்கால நிலைமை—அ. ரங்கஸ்வாமி ஐயர் 81

From the Editor—A. Rangaswami Iyer

2. நமது நாட்டின் முன்னேற்றத்திற்குரிய இரண்டு சாதனங்கள் } வெங்கடேச சர்மா 85

Two things necessary for the regeneration of our Country } Venkatesa Sarma

3. ரிஷிகள் அல்லது மகாத்மாக்கள்—அ. ரஙகஸ்வாமி ஐயர் 9

Rishis or Masters-A. Rangaswamy Iyer

4. பூலோக புவர்லோக சம்பந்தம்—B. S R சுப்பிரமணியன்

Relation of the Dead to Earth-B. S. R. Subraman

5. என் குருநாதன் என்னை ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது? } ஆத்தங்குடி எம். ஸ்வாமிநாதையர் 100

Why not I—Attangudy M. Swaminathier

6. சங்கமும் மெம்பரும்-ஆத்தங்குடி T.R.M.M. சுப்பராமையர் 103

Our Society & its Members } Attangudy T. R. M. M Subbaramier.

7. தோற்றாத்துணைவர்கள்—அ. நம்மாழ்வார். 111

Invisible Helpers—A Nammalwar.

8. புத்தக வரவு 113

Review of Books—

9. சமாசாரம் 113

News

---

காலஞ்சென்ற ப. நாராயணஐயரவர்கள் பிரசுரித்திருக்கும்

தமிழ்ப் புத்தகங்கள்.

1. பதஞ்சலி யோகசூத்திரம் ரூ.1-0-0

2. மாதஸ்ரீ அன்னிபெஸண்ட் அம்மையாரின் யோக உபந்யாஸங்கள் 0-12-0

3. இயேசுகிறிஸ்து என்பார் ஒழுகிக்காட்டிய ஒழுக்க முறைநூல் 1-0-0

4. மனிதன் அமிசாவளியின் உண்மை 0-8-0

மேற்கண்ட புஸ்தகங்கள் வேண்டுவோர் மதுரை பிரஹ்மஞான ஸபைப் பிரெசிடெண்டு அவர்களுக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 5. | 1914௵ ஜூலை௴ 15௳
ஆனந்த௵ ஆனி௴ 32௳ | பகுதி 3

## தற்கால நிலைமை.

பிரஹ்மக்ஞான சபை அக்கிராஸனாதிபதியாகிய மாதா ஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையவர்கள் நாளது௴ 10௳ சீமையிலிருந்து பம்பாய் நகரம் வந்து இறங்குகின்றனர். அவர் நம்முடைய இந்திய தேசத்தின் நன்மையைக் கருதி இங்கிலாந்து தேசத்தில் பலவிதமாக இந்தத்தடவை உழைத்து வந்திருக்கின்றனர். ராஜரீக விஷயமாய் பல இங்கிலீஷ் பத்திரிகைகளில் இந்தியர்களின் க்ஷேமத்தையும் இந்தியாவின் நன்மையையும் நாடிய பல நிருபங்களை எழுதியும் இந்தியன் நாஷனல் காங்கிரஸ் பிரதிநிதிகள் இங்கிலாந்திற்கு சென்று முயன்று வரும் வேலைகளுக்கு ஒத்தாசையாக பலவிதத்தில் உழைத்தும் வந்திருக்கின்றார்கள்.

* * *

அவர்களை மறுபடியும் இந்த பிரஹ்மக்ஞான சபையின் அக்கிராஸனாதிபதியாக சபை மெம்பர்கள் தேர்ந்தெடுப்பார்கள் என்பதில் சற்றும் ஐயமில்லை. இந்தியாவில் இதுவரையில் அனுப்பப்பட்ட

4410 வோட்டுகளில் 4345 வோட்டுகள் அம்மையாரை மறுபடியும் அக்கிராஸனாதிபதியாக நியமனம் செய்வதற்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதுபோலவே இங்கிலாந்து முதலிய தேசங்களில் நேர்ந்திருக்கின்றன. இன்னும் 7 வருஷங்களுக்கு அவர்கள் நமது சபையின் அக்கிராஸனத்தை வகிப்பது நிச்சயம்.

*
* *

அவர்களின் குருநாதனது ஜனனபூமியாகிய இந்தியதேசத்தில் அந்நாதன் அக்கிராஸனத்தை வகித்துக்கொண்டு நாளிதுமீ 10உ கால்வைக்கும் தருணத்தில் அவர்களுக்கு நல்வரவு கூறி அவர்கள் வரவைக் கொண்டாடுவதற்காக பம்பாயிலிருக்கும் 4 கிளைச்சங்கத் தலைவர்கள் மற்ற கிளைச்சங்கங்களின் அதிகாரிகளுக்கு நிருபங்கள் எழுதி அவர்களுடன் ஒத்து வேலைசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் காலத்தில் இந்த ஏற்பாட்டை அங்கீகரிக்கும் கிளைச்சங்கங்களால் ஒரு உபசரிப்புப்பத்திரிகையும் வாசிக்கப்படும். அச்சமயத்தில் நேரிடும் செலவிற்காக சந்தாத்தொகைகளைத் தக்கபடி கொடுக்கவும் பிரதிநிதிகளை பம்பாய் நகரத்திற்கு அனுப்பவும் கிளைச்சங்கங்களைக் கோரியிருக்கிறார்கள். நமது அக்கிராஸனாதிபதியவர்களின் வரவு அத்தருணத்தில் வெகு விமரிசையாய்க் கொண்டாடப்படுமென்று நாம் நம்புகிறோம்.

*
* *

பிரஹ்மக்ஞான வித்தியாபிவிருத்திஸபை (Theosophical Educational Trust) யாலும் பிரஹ்மக்ஞான சபை மெம்பர்களாலும் பல இடங்களில் வித்தியாசாலைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன பூனா நகரத்தில் பிரஹ்மக்ஞானசபை சம்பந்தமாக ஒரு வித்யாசாலை ஏற்படுத்த ஒரு மெம்பரால் ரூ 20000 நன்கொடையாக கொடுக்கப்பட்டிருப்பதைக் கேட்க மிக்க சந்தோஷமுற்றோம்.

*
* *

மதாபிவிருத்தியின் பொருட்டு உலகத்திற்குப் பொதுவான ஒரு மஹாசபையானது சென்ற வருஷம் பாரிஸ் மாநகரத்தில் கூடிற்று. அந்தக் காலத்தில் அந்த மகாசபையின் காரியதரிசியானவர் அந்த சபை உலகத்தில் மதாபிமானமுள்ள பல நகரங்களில் கூடப்

போகின்றதென்று வெளியிட்டனர். அக்கூட்டங்களில் பற்பல மதாபிமானிகள் அவரவர்கள் மதக் கோட்பாடுகளை எடுத்துக்காட்டி உபந்யாசம் செய்வார்கள். அடுத்த ஹேமந்த ருதுவில் இச்சபையானது இந்தியாவில் நான்கு பிரதான நகரங்களாகிய கல்கத்தா, பம்பாய், சென்னை, லாகூர் என்ற இடங்களில் கூடப்போகிறதாகச் சொல்லப்படுகிறது.

* * *

ஆங்கில தேசத்தில் அநேகம் இந்திய வாலிபர்கள் வித்தியாபிவிருத்தியின் பொருட்டு சென்றிருக்கிறார்கள். அவர்கள் முன்பின்னறியாத தூர தேசத்தில் போயிருப்பதால் அவ்விடத்தில் அவர்களுக்கு வசதியான ஜாகைகள் ஏற்படுத்திக் கொடுக்கவும் அவர்கள் சாப்பிடுவதற்கு ஏற்ற சௌகரியங்களைச் செய்யவும் அத்தேசத்தில் அல்ப சகவாஸத்தை விலக்கி பெருந் தன்மையானதும் கௌரவமானதுமான சகவாஸத்தை அம்மாணாக்கர்களுக்கு உண்டு பண்ணவும் மற்றும் அவர்கள் குடும்பத்திலிருந்து விலகி தனிமையாக அன்னிய தேசத்தில் போயிருப்பதால் அவர்களுக்கு பெற்றோர்கள் ஸ்தானத்தில் இருந்து உதவி புரியவும் 'இந்திய நேசர்கள்' (Friends of India) என்னும் சபை 1907ம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்டு 1911ம் வருஷத்தில் சட்டப்பிரகாரம் உறுதியாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

* * *

அந்தச் சபைக்கு அக்கிராஸனாதிபதி பிரஹ்மஞான சபையின் அக்கிராஸனாதிபதியே. உப அக்கிராஸனாதிபதி காசிபிரதான கல்விச்சாலையின் தலைவரா யிருந்த Mr. அருண்டேல் என்பவர்; காரியதரிசி பிரஹ்மஞான சபையில் மெம்பராகிய Mr. ஹெர்பர்ட் ஒயிட் என்பவர். லண்டன் நகரத்தில் அநேக கமிட்டி மெம்பர்களும் ஆங்கில தேசத்தின் உள் நாட்டில் அநேக கமிட்டி மெம்பர்களும் இருக்கிறார்கள். இந்தியாவிலிருந்து ஆங்கில தேசத்திற்கு வருஷா வருஷம் அநேக மாணாக்கர்கள் செல்லுவதில் இப்பேர்ப்பட்ட சங்கம் இருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது.

* * *

சென்னையில் கல்வி கற்கும் இந்திய வாலிபர்களின் க்ஷேமத்தை ஊக்கத்துடன் கவனித்து அதற்கு அனுகூலமான முயற்சிகளை எடுத்து முடிப்பதானது இதுவரை குறைவாயிருந்திருக்கின்றது என்றே நாம் சொல்லலாம் ஆனால் நமது சபையின் அக்கிராஸனாதிபதியவர்களின் முயற்சியால் 'இந்திய வாலிபர்களின் சங்கம்' (Young-men's Indian Association) என்று ஒரு சபை ஸ்தாபிக்கப்பட்டு அதற்காக சென்னை ஜார்ஜ் டவுனிலும் திருவல்லிக் கேணியிலும் சென்னைக்கடுத்த சேத்துப்பட்டு என்ற கிராமத்திலும் கட்டிடங்கள் கிரயத்திற்கும் வாடகைக்கும் அமர்த்தப்பட்டு சுமார் 500 மாணாக்கர்கள் குடியிருந்து வசிக்கவும் அவர்களுக்கு ஆரோக்கியமான ஆகாரம் கொடுக்கவும் தகுந்த ஏற்பாடுகள் மும்முரமாய் நடத்தப்பட்டு வருகின்றன.

* * *

இதுபோலவே வெளியூர்களிலும் ஏற்பாடு செய்யவேண்டியது அவசியமாயிருக்கிறது. இப்போது மாணாக்கர்களாக விருப்பவர்கள் தான் வயசு வந்தவுடன் தேசாபிவிருத்தியில் ஊக்கமாய் உழைக்கக் கூடியவர்கள். அவர்களுக்கு உற்சாகத்தைக் கொடுக்கவும் அவர்களுடைய ஊக்கத்தைச் சரியான மார்க்கங்களில் பிரவிர்த்திக்கும்படி செய்யவும் அவர்களுடைய மனதை நல்வழியில திடப்படுத்தவும் மற்றும் அவர்களுடைய தேக சௌக்கியத்தை அபிவிருத்தி செய்யவும் இவ்வித சபைகள் உபயோகமாயிருக்கின்றன.

அ. ரங்கஸ்வாமி ஐயர்.

---

நன்மொழி.

எவ்வகைசார் மதங்களிலே பொய்வகைசாத் திரங்க
ளெடுத்துரைத்தே யெமதுதெய்வ மெமதுதெய்வ மென்று
கைவகையே கதறுகின்றீர் தெய்வமொன்றென் றறியீர்
கரிபிடித்துக் கலகமிட்ட பெரியரினும் பெரியீர்
ஐவகைய பூதவுடம் பழிந்திடிலென் புரிவீ
ரழியுடம்பை யழியாமை யாக்கும்வகை யறியீர்
உய்வகையென் றனித்தந்தை வருகின்ற தருணம்
உற்றிவண் உற்றிடுவீர் பெற்றிடுவீர் உவப்பே.

# நமது நாட்டின் முன்னேற்றத்திற்குரிய இரண்டு ஸாதனங்கள்.

---

நம்முடைய பூர்விக சம்பிரதாயங்களையும் பழைய வழக்கங்களையும் சற்று ஆராய்ந்து பார்க்குமிடத்து நம்மவர்கள் ஜனசமூகத்தில் எவ்விதம் நடந்து வந்தார்கள்? நாம் இப்போது அவ்வாறு நடந்து வருகிறோமா? என்கிற விஷயங்களைக் கவனிக்க வேண்டி வருகின்றது. பகவான் தான உலக சம்ரக்ஷணார்த்தம் எடுத்த அவதாரங்கள் எல்லாம் உயர் குலத்திலாவது உயர் ஜாதியிலாவது எடுத்தார் என்று சொல்லமுடியாது. மஹா இழிவான தாழ்ந்த ஜன்மத்திலும் தோன்றினர். உத்தமமான உயர் குலத்திலும் தோன்றினர். பூஜ்ஜியர்களான தேவரிஷிகளும் பிரஹ்ம ரிஷிகளும் உத்தமமான உயர்குலத்திலேயே தோன்றினவர்கள் என்று நாம் சொல்லுதல் சாத்தியமா? உயர்குலத்தவர்களே தான் உத்தமபதவி யடைந்தார்கள், மற்றவர்கள் அடையவில்லை என்றாவது தகுந்த ஆதாரவோடு சொல்லலாமா? அப்படியும் சொல்ல வழியில்லையே. உயர் குலத்தவர்களாலேயே தான் மற்றவர்களுக்கு நீதி போதனைகள் போதிக்கப்பட்டதா? தாழ்ந்தவர்களாலும் உயர்ந்தோருக்கு போதிக்கப்பட்டதில்லையா? போதிக்கப்பட்டதாக எண்ண பற்பல ஆதாரங்கள் இருக்கின்றனவே. இவற்றை யெல்லாம் சற்று ஆராய்ந்து பார்க்குமிடத்து என்ன உண்மை வெளியாகின்றது. "எக்குடி பிறப்பினும் யாவரே யாயினும் அக்குடியிற் கற்றோரை வருக வென்பர்" என்பது வெளிப்படவில்லையா? உண்மையான உயர்ந்த ஞானத்தைப் புகட்டும் கல்வி கேள்விகளில் சிறந்தவர்கள் யாராயிருப்பினும் எக்குலத்தவராயிருப்பினும் எவ்வித வேற்றுமையும் வித்தியாசமுமின்றி உயர்வாய் மதிக்கப்பட்டுக் கொண்டாடப் பட்டு வந்தார்கள் என்பது கரதலாமலகம் போல் விளங்குகிறது. ஏதோ சிற்சில காரணங்களை முன்னிட்டு ஜாதி வேற்றுமைகள் ஏற்பட்டிருந்தவென்றும், அந்தந்த வியவகாரங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் அவைகள் மதிக்கப்பட்டன வென்றும், உயர்தர ஞானத்தை அடைவதிலாவது அன்னியர்களுக்கு போதிப்பதிலாவது மற்ற ஜனசமூக வியவகாரங்களிலாவது இவைகள் அனுஷ்டிக்கப்படவில்லை யென்னும் அவரவர்கள் அறிவிற்கும் சாமர்த்தியத்திற்கும் ஏற்றவ

பெரும் பெருமையும் பெற்றுவந்தார்களென்றும் காட்டத்தக்க ஆதாரங்கள் அனந்தமிருக்கின்றன. ஆனால் காலம் செல்லச் செல்ல பற்பல ஜாதியார்களும் பற்பல காரணங்களை முன்னிட்டு வேற்றுமையையே மேற்கொண்டவர்களாய் தாழ்ந்தோரென்றும் உயர்ந்தோரென்றும் வீண்காஷ்டவாதங்கள் செய்துகொண்டு நம்மவர்கள் நாகரிகத்தில் அபிவிருத்தியடையாவண்ணம் பிரதிபந்தங்களைத் தேடிக்கொண்டார்கள். அவற்றிற்கு வேதசாஸ்திரங்களையே மேற்கோளாகக் கொண்டார்கள். புராதன கிரேக்கர்களும் ரோமர்களும் எந்த நாகரிகத்தை மெச்சிக் கொண்டாடித் தங்கள் தேசங்களில் ஊர்ஜிதப்படுத்தினார்களோ, எந்த நாகரிகமானது மற்ற இவ்வுலகின் நாகரிகத்திற்கே ஆதிவித்தாய் ஏற்பட்டதோ, எந்த நாகரிகமானது ஹிந்துக்களை ஒரு காலத்தில் கொண்டாடும்படி செய்ததோ அந்த உயர்தர நாகரிகத்தை அடைந்திருந்த பூர்விக ஆரியர்களின் சந்ததியார்களாகிய நாம் அவ்வித நாகரிகத்தை யிழந்தும் மற்றவர்கள் மேலோங்கக் கண்டும் இன்னம் நமது தேசத்தின் க்ஷேமத்தையும் ஜனசமூகத்தின் க்ஷேமத்தையும் நாடி உழைக்கும் தன்மைக்கு வந்ததாகவாவது வர உத்தேசித்திருப்பதாகவாவது சொல்லும்படியான நிலைமையைக் கூட இன்னம் அடையவில்லை. இவைகளுக்கெல்லாம் காரணம் நம்மவர்கள் மதியீனம் என்று சொல்லலாமா, அகங்காரம் என்று சொல்லலாமா, அசிரத்தை என்று சொல்லலாமா? இம்மூன்றும் சேர்ந்திருக்கிறது என்று சொல்லலாம். உறுதியாய்ச் சொல்லலாம். தங்களுக்கு லாபகரமான சிற்சில விஷயங்களில் முன்னோர் சம்பிரதாயங்களையும் நூலாதரவுகளையும் புறம்பே தள்ளிவிட்டார்கள். செய்யக்கூடாதென்று விலக்கேற்படுத்திய அநேக காரியங்களைச் செய்துவருகிறார்கள். இதற்கெல்லாம் ஆதாரம் என்ன? எந்தப் புராதன நூல் என்று பார்ப்போம். ஒன்றுமில்லை. சுயநலமேயன்றி மற்றெதுவுமில்லை. அநேகவிதமாக சிற்சில அத்யாவசியமான சம்பிரதாயங்கள் ஆதிகால வழக்கத்தை ஒட்டியே சாஸ்திர சம்மதமாகவே அநுஷ்டிக்கக் கூடியவைகள். நம்மவர் க்ஷேமலாபத்தை ஒட்டிக் கட்டாயம் இப்போதும் அனுஸரித்தே தீரவேண்டியவைகள். அத்தன்மையவற்றிலும் நமது சுயநலத்தையே பெரியதாக வெண்ணி புண்ணிய பாபங்களுக்கு அஞ்சாத

நெஞ்சத்தினராய் புராதன மேற்கோள்களை யெல்லாம் விட்டு உதறி நாமிட்டது சட்டமாய் நடந்து வருகிறோம். அத்தன்மைய விஷயம் ஒன்றைப்பற்றி மட்டும் இன்று பிரஸ்தாபிக்கத் துணிந்தேன்.

நம்மவர்கள் தெய்விகமாகக் கொண்டாடும் வேதசாஸ்திரங்களில் அல்லது சுருதி ஸ்மிருதிகளில் ஒரு மனிதன் பிறவி முதல் அந்தியம் வரையுள்ள காலத்தில் அதிபால்யமாகிய சிறுகுழந்தைப் பருவத்தை நீக்கி மற்றதை அந்தந்த வயதுக் கிரமத்திற்கு ஏற்றபடி நான்கு பிரிவுகளாகப் பிரித்திருக்கிறது. அதாவது பிரஹ்மசாரி கிருஹஸ்தன், வானப்பிரஸ்தன், சன்னியாசி என்பதே. இதில்முதல் இரண்டு பிரிவுகளை நாம் தீரத்தெளிய அறிந்து கொள்ள வேண்டியது. இதில் அதிமுக்கியமானது பிரஹ்மசாரி. பிரஹ்மசாரி என்றால் யார், எந்தக் காலமுதல் அந்தத் தன்மை ஏற்படுகின்றது, எவ்வளவு காலம் குறைந்த பக்ஷமாய் அதற்கென்று ஏற்பட்டது, அதை எவ்விதம் கழித்து வந்தார்கள், எங்கே கழித்து வந்தார்கள், இப்போது அந்தக் காலம் எப்படி செலவழிக்கப்படுகிறது? என்கிற விஷயங்களை ஆராய்வோம். எந்தெந்த சம்பிரதாயங்கள் சுருதி யுக்தி அனுபவம் ஆகிய மூன்றிற்கும் ஒத்திருக்கிறதோ, அவைகள் உத்தமமானவைகள். அவைகள் எக்காலத்திலும் யாவராலும் கட்டாயம் அனுஸரிக்கப்பட வேண்டியவைகள். அவற்றிற்கு விருத்தமாய் நாம் ஒன்றும் செய்யக் கூடாது என்று நமது பெரியோர்கள் முற்காலத்திலும் தற்காலத்திலும் முறையிடுகிறார்கள். இம்மூன்றும் ஒத்துவராத சந்தர்ப்பங்களில் பின்னது இரண்டையும் விலக்கி முன்னதற்கே பிராதான்யத்தை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இது எல்லோரும் நன்றறிந்த விஷயம். அந்தக் காரணம் பற்றியே கால தேச வர்த்தமானங்களை ஒட்டி நாம் முன்னுக்குவர ஹேதுவான சீர்திருத்தங்களைச் செய்து கொள்ளலாமென்று யாராவது முன்னுக்கு வருவார்களாயின், என்றுமில்லாத வழக்கம், சாஸ்திர சம்மதமில்லாத நவீனம் என்று வாயடி கையடி அடிக்கும் விற்பன்னர்கள் என்று நம்மால் மதிக்கப்படும் பெரியோர்கள் அனேகர் தங்கள் ஸ்வய நன்மை, திரவிய லாபம் முதலியவற்றை உத்தேசித்து இப்போது மாற்றிக்கொண்டிருக்கும் சம்பிரதாயங்கள் சுருதியுக்தி அனுபவம் ஒன்றுக்குமே அடங்காமலிருக்க அவ்வித மாறுபாடுகளை

எந்த ஆதரவின் பேரில் செய்து கொண்டார்கள்? இவைகளை யோசிக்கு மிடத்தில் நம்மவர்கள் க்ஷேமாபிவிருத்திக்கு நம் பெரியோர்களே தடையாயிருக்கிறார்கள் என்பது நன்கு விளங்கும்.

சாதாரணமாய் 7 வது வயதில் உபநயனம் செய்வதென்றும் அது முதல் கல்யாணம் வரை பிரஹ்மசாரியாயிருக்கிறானென்றும் அவ்வித பிரஹ்மசாரியா யிருக்கும் காலத்தில் ஒரு சற்குருவிடமாகவே காலத்தைக் கழித்து முதல் முதலாக தன் சாகைசம்பந்தமான விஷயங்களையும் அத்தியாவசியமான சில சாஸ்திரங்களையும் கற்றுக்கொண்டே தீரவேண்டும். அதற்குப்பிறகு சௌகரியத்தை யனுசரித்து அதிகம் கற்றுக்கொள்ளலாம். இப்படி வித்தியார்த்தியாக குருகுலவாஸம் செய்துகொண்டிருக்கும் காலமுழுவதும் பிரஹ்மசாரியாகவே இருக்கவேண்டும் என்பது மஹனீயர்களாகிய ரிஷிகளின் துணிபு என்றும், இதுவே நமது சுருதி ஸ்மிருதிகளும் நிறைவிடுகின்றனவென்றும் எல்லோரும் அங்கீகரிப்பார்கள். அப்படியல்லவென்று அந்தப் பிரமாணங்களைக் கொண்டு மறுக்க யாராலும் முடியாது. அத்தன்மைய வித்தியார்த்தியாக இருக்கும் காலத்தில் படிப்பிற்கு பிரதிபந்தமாய் ஏற்படக்கூடிய சிற்சில விஷயங்கள் அந்த பிரஹ்மசாரிக்கு விலக்காய் ஏற்பட்டிருந்தன. ஏனெனில், நமது மஹான்களின் முக்கிய நோக்கம் நம்மவர்கள் கல்வி கேள்விகளிற் சிறந்தவர்களாய் விளங்கவேண்டும். அவ்வித கல்விக்கு க்ஷணநேரமேனும் எவ்வித இடையூறு மேற்படக்கூடாது என்பதேயாம். ஒருவன் நியாயமாய்க் கற்கவேண்டியவற்றை ஆரம்பிக்கும் வயது ஏழுக்குப் பிறகு என்பது நிஷ்கரிஷையாய் ஏற்படுகிறது. அந்தக் கல்விக்கு ஆதாரமான அக்ஷராப்யாஸ முதலிய பிரதமசிக்ஷைகளை ஐந்தாவது வயது தொடங்கி இரண்டரை அல்லது மூன்று வருஷகாலம் பழகி பிரஹ்மோபதேசம் ஏற்பட்டவுடனே உண்மையானகல்விகற்க அருகனாகிறான் என்பது நிச்சயமாய் ஏற்படுகிறது. இது நமது நூற்றுணிபு. இது தற்கால பாடசாலை சம்பிரதாயங்களுக்கும் பொருந்தியிருக்கிறது. சாதாரணமாக பாடசாலைகளில் மூன்றாவது வகுப்பில்தான் சரியானபடி பாடங்கள் தொடங்குகின்றன வென்பதும் நாம் எல்லோரும் அறிந்த விஷயம். நமது மதசம்பிரதாயப்படி ஒரு வித்தியார்த்தி தனக்கு அத்தியாவசியமான தன் சாகை சம்பந்த

மானவற்றைக் கற்றே தீரவேண்டுமென்று ஏற்பட்டிருக்கிறது. அதற்கு ஏற்பட்ட காலவரையறையானது சுமார் 8 வருஷத்திற்குக் குறையாது என்று ஏற்படுகின்றது, இந்த எட்டுவருஷகாலமாவது அத்தியாவசியமாய் பிரஹ்மசாரியாகவே இருந்து கொண்டு குருகுலவாசம் செய்துகொண்டு படித்தே தீரவேண்டுமென்று ஏற்படுகின்றது. தற்கால சம்பிரதாயத்திலும் 3-வது வகுப்பு முதல் 8 வருஷ காலத்திற்குக்குறையாமல் ஒருவன் படித்தால்தான் தனக்கு அத்தியாவசியமான பள்ளிக்கூட கல்வியைக்கற்றுக்கொள்ளக்கூடும். ஆனதுபற்றியே அவ்வித கல்வி சம்பூரணமடைந்ததும் ஸ்கூல் பைனல் ஆய்விட்டது. அதாவது பள்ளிக்கூடத்தில் அத்யாவசியம் வித்தியார்த்தியாயிருந்து படிக்கவேண்டிய படிப்பின்முடிவு ஏற்பட்டுவிட்டது என்கிறோம். மற்றப்படி மேலே படிப்பதானது அவரவர்கள் இடம், பொருள், ஏவல் முதலிய சௌகரியங்களைப் பொறுத்தது. முற் காலத்தில் ஒவ்வொருவனும் தன் சாகையையாவது நன்றாய் அறிந்துகொள்ளவேண்டுமென்று ஒவ்வொரு தந்தையும் தன் தன் புத்திரன் விஷயத்தில் எப்படி சிரத்தை எடுத்துக்கொண்டார்களோ அப்படி இப்போதும் என்னவோ ஒரு ஸ்கூல் பைனல் ஆவது ஆகட்டும் என்று பெற்றோர்கள் சொல்வதை நாம் கேட்கிறோம். ஆகையால் குறைந்தது அவ்வளவாவது ஒவ்வொருவரும் தெரிந்திருப்பது நன்று என்று நிஷ்கரிஷையாய் ஏற்படுகின்றது. ஆகவே ஒருவன் வித்யார்த்தியாய்ப் பயிலும் காலமெல்லாம் பிரஹ்மசாரியாகவே இருந்து வந்தானென்பதும் அப்படித்தான் இருந்தே தீரவேண்டுமென்பதும் நம்முடைய கிரந்தங்களால் நிஷ்கரிஷையாய் ஏற்படுகிறதல்லவா? இந்த ஏற்பாட்டினால் உண்டான நன்மைகள் அனந்தம். ஆயின் இப்போது பார்ப்போம். சரியானபடி நியமம் தப்பாமலிருக்கும் பிரஹ்மசாரிக்கு ஏற்பட்டிருந்த சிற்சில விலக்குகளில் நம்முடைய இருககிருத்திபவிஷயங்களுக்கு அத்தியாவசியம் அனுகூலமாயிருக்கக் கூடிய இரண்டொரு விலக்குகளை வைத்துக்கொண்டோம். அந்தப்பிரஹ்மசாரி ஆசிரமதர்மத்தினின்றும் வழுவாமலிருப்பவனுக்கு ஏற்பட்ட விலக்கேயன்றி மற்றப்படி அவ்வாசிரம தர்மத்தை சரிவர நடத்தாதவர்களுக்கு ஏற்பட்ட விலக்கல்ல. உபநயனம் செய்வதற்கு ஏற்பட்ட வயதையும் மாற்றிக்கொண்டோம். சரியாய் சுலபமான அக்ஷரக்

களே வாயில் நுழையமுடியாத சின்னம் சிறு பிராயத்தில் உபநய னம் செய்யவும் ஏற்பட்டு விட்டோம். உபநயனத்திற்கென்று அதமபட்சமாய் ஏற்பட்ட பிராயத்திற்கு முன்னதாகவே கிருஹஸ் தனுக்கவும் துணிந்துவிட்டோம். அதாவது பிரஹ்மசாரியாகிய முதல் ஆசிரமத்திலேயே பிரவேசிக்கத்தகுதியற்ற சிறு பிராயத்தில் அவ்வாசிரமத்தைக் கடந்து அதற்குமேல் ஏற்பட்ட ஆசிரமத்தில் பிரவேசிக்கும்படி செய்துவிடுகிறோம். இது சாஸ்திர சம்மதமா? அல்லது நமது பெரியோர்கள் ஆசரணையா? அல்லது யுக்திக்காவது பொருந்தி வருகிறதா? இவ்வித மாறுதலைச் செய்துகொள்ள நமக் கு எந்த சுருதி ஸ்ம்ருதிகள் ஆதாரத்தைக் கொடுக்கின்றன? ஒன் றுமில்லையே. ஏன் மாற்றிக்கொண்டோம்? ஏதாவது அனுகூலத்தை உத்தேசித்தோமா, அதுவுமில்லை. அனுகூலமாயிருப்பது போய் வித்தியாப்பியாசத்திற்குப் பிரதிகூலமாக வல்லவோ முடிகிறது! எந்தப்பெற்றோர்கள் தெய்வம்போலிருந்து தங்கள் குழந்தைகளின் பிற்கால க்ஷேமத்தை யுத்தேசித்துத் தங்கள் குழந்தைகளின் நன் மையையும் அபிவிருத்தியையும் கவனிக்கவேண்டுமோ அந்தப்பெற் றோர்களே தங்கள் குழந்தைகள் தலையெடுக்காவண்ணம் கெடுக்கும் கொடிய ராக்ஷஸர்களாய் விட்டார்கள் என்று ஏன் துணிந்துசொல் லக்கூடாது? கேவலம் ஸ்வய நலத்தையே கோரி நம்முடைய சா ஸ்திரங்களுக்கு விரோதமாய் நடக்கும் காதகர்கள் என்று ஏன் சொல்லக்கூடாது? வீணில் என் பேரில் ஆயாசம்கொள்ளாதீர்கள். மஹான்களாகிய ரிஷிகளின் கொள்கைகளையும் கிரந்தங்களையும் அவற்றின் நோக்கங்களையும் ஆராய்ந்து பாருங்கள். விவாகத்தி ற்கு ஏற்பட்ட வயதென்ன? ஏன் அந்தப்படி வயதை நிர்ணயித்தா ர்கள்? அக்காலத்தில் அனுஷ்டிக்கப்பெற்ற சிற்சில சம்பிரதாயங்க ளால் நாம் என்ன அறிந்துகொள்கிறோம் என்பதைச் சற்றுகவனிப் போம். மேலே சொன்ன பிரஹ்மசாரி ஆசிரமத்தின் காலமுடிவே இதற்கு ஆரம்பமென்றும் இந்த கிருஹஸ்தாசிரம தர்மத்தில் பிர வேசிக்கத்தயாராக இருக்கும் காலம் 16-வது வயதுக்குப் பின்னெ ன்றும் ஒருவாறு நிஸ்ஸந்தேகமாய்க் கொள்ளலாம்.

(இன்னும் வரும்.)

வெங்கடேச சர்மா.

## பூலோகபுவர்லோக சம்பந்தம்.

(54-ம் பக்கத்தொடர்ச்சி.)

---

சடிதியில் நேருகிற மரணங்களில் சில சமயங்களில் மிகுந்த பயத்தோடும், மனக்குழப்பத்தோடும் இறக்கிறார்கள் இத்தகைய பயமும் மனக்குழப்பமும் புவர்லோக வாஸத்திற்கு அசௌகரியங்களாக ஏற்பட்டு, அவ்வுலகத்தில் அவர்களுக்கு இடைஞ்சல்களாக ஸம்பவிக்கின்றன. சடிதியில் மரித்த சிலருக்கு இப்பயமும் மனக்குழப்பமும் சாவுக்குப் பிறகுங்கூட அபூர்வமாய் இருப்பதுண்டு. ஆகையால் திடீரென்று மரணம் சம்பவிக்காமல் கொஞ்சகாலங் கிடந்தாவது தாம் இறக்கப்போகிறோம் என்ற பிரக்ஞையுடன் இறக்கவேண்டும் என்று ஸாதாரண ஜனங்கள் விரும்புவது வாஸ்தவமாகவே கொஞ்சம் உண்மையை ஆதாரமாக உடையது. ஆனால் பிரஹ்மஞான தர்சனத்தின் உண்மைகளைச் சரிவர அநுஸரித்து வருபவன் ஒருவனுக்கு இறக்கச் சித்தம் செய்துகொள்வதற்குக் காலமே அநாவசியம். ஏனெனில் அவன் எப்போதும் தன்னாலியன்றமட்டும் நன்மையையே கடைப்பிடிக் தொழுகுவனாகையாலும் புவர்லோக விஷயங்களைப் பற்றி முன்னரே அறிந்திருப்பானாகையாலும், எப்பொழுது இறந்தாலும் அவனுக்கு ஒரே மாதிரிதான்.

ஆகையால் சடிதியி லிறப்பவர்களெல்லாம் புவர்லோகத்தின் கீழ்ப்படியில் தீர்க்க காலம் வசிக்கவே செய்கிறார்கள் என்று சொல்லவேமுடியாது. ஆயினும் புவர்லோகத்தில் அபிவிருத்தி கொஞ்சம் தடைப்படுகின்றதென்னலாம். ஏனெனில் வியாதிஸ்தராகக் கிடந்திறந்தால் புவர்லோகத்தின் கீழ்ப்பகுதியைச் சேர்ந்த அணுக்களையெறித்துவிடக் கூடியதாய் சம்பவிக்கும் ஒரு சந்தர்ப்பம் சடிதியான மரணங்களுக்கெல்லாம் வாய்க்கிறதில்லை. சிறு குழந்தைகளோ வென்றால் சூது வாதில்லாத கபடற்ற கொஞ்சகால பூலோக வாழ்க்கையில் புவர்லோகத்தின் கீழ்ப்படிகளுக்குரிய கெட்ட வாஸனைகளை நாடுவதற்கிடமேயில்லை. ஆகையால் குழந்தைகள் இறந்தால் அவர்கள் புவர்லோகத்தின் கீழ்ப்படிகளில் தங்குவதேயில்லை. சிறு குழந்தைகள் வியாதியிலாயினும் சடிதியாகவாயினும் மரித்தால்,

புவர்லோகவாஸம் அவர்களுக்குச் சொற்பகாலந்தான். ஸுவர்லோகவாஸம் உண்மையில் நீடித்ததாயினும், குழந்தைகளுக்குத் தக்கபடி நீண்ட காலம் ஸ்வர்க்கானுபவம் ஏற்பட்டபின் சீக்கிரம் பூலோகத்திற்கு அக்குழந்தைகள் திரும்புகிறார்கள். ஏனெனில் மநுஷ்யர்கள் பூலோக வாழ்வில் தம் சக்திகளை வெகுவாய்ச் செலவிட்டிருப்பார்களேயானால் லோகாந்தரங்களில் அதற்குத் தக்கபடி நீண்ட அநுபவம் அவர்களுக்குண்டு. பூலோகத்தில் சொற்பகாலம் வாழ்ந்த குழந்தைகளோமிக அற்ப சக்திகளைத்தான் செலவிட்டிருக்கக்கூடுமாகையால், வயது முதிர்ந்த மநுஷ்யர்களை யுத்தேசிக்க லோகாந்தரங்களில் குழந்தைகளின் வாழ்வு குறைந்த காலமாகவே யுள்ளது. "குழிப்பிள்ளை மடியிலே" என்று நம்மவர்கள் ஸாதாரணமாக வழங்குகிற வசநம் இங்கு கவனிக்கத்தக்கது.

இறந்தவனுடைய அழிந்த ஸ்தூல சரீரமாகிய சவத்திற்கு ஸாதாரணமாக நாம் செய்யும் சடங்குகள், புவர்லோகத்திற் சென்று வசிக்கும் அவனுக்கு யாதொரு குணத்தையும் உண்டாக்குவதேயில்லை. மேலே பெரிய எழுத்தில் குறிப்பிட்டிருப்பதெதற்கென்றால், முதலில் ஸாதாரணமாய் அநுஸரிக்கப்படும் சடங்குகளைத் தவிர, சில தாந்த்ரிகக் (Magic) கிரியைகளால் புவர்லோகவாஸியினிடத்தில் குணதோஷத்தை யேற்படுத்தல் ஸாத்தியம். இரண்டாவது ஸ்தூல சரீரத்திற்குச் செய்யப்படும் உபசாரங்கள் யாவும் புவர்லோகவாஸியைத் தாக்க இயலாவாயினும் இறந்தவனுடைய அறிவீனத்தாலும் முட்டாள்தனத்தாலும் அம்மாதிரி தாக்குகின்றது. இதைப் பின் விவரிப்பாம்.

ஒரு மனிதனுடைய புவர்லோக வாழ்க்கை எவ்வளவு காலம் என்பது இரண்டு விஷயங்களைப் பொறுத்ததாயிருக்கிறது, (1) அவனுடைய பூலோக வாழ்வின் இயல்பு. (2) இறந்த பிற்பாடு அவனுடைய மநநிலை. பூலோகத்தில் வாழும்பொழுது கொள்ளுகிற ஆசைகளாலும் மநவுணர்ச்சிகளாலும் தன் புவர்லோக சரீரத்தைப் போஷித்து வளர்க்கிறான். ஒருவனுடைய ஆசாபாசங்களுக்காதாரமான புவர்லோக சரீரம் மேல் லோகமாகிய மாநஸிக லோகத்தினின்று நாம் கொள்ளும் உயர்ந்த அல்லது தாழ்ந்த லக்ஷ்யங்களுக்குத்

தக்கவாறும் கீழுலகமாகிய பூலோகத்தினின்று நம்முடைய நல்ல அல்லது கெட்ட சரியை, நாம் உட்கொள்ளுகிற உணவு, பானம் இவைகளின் உயர்தரம் அல்லது கீழ்த்தரத்திற்குத் தக்கவாறும் அமைகின்றது. மேற்கூறிய இவ்விரண்டு உலகங்களினின்றும் புவர்லோக சரீரத்தின் தன்மை நிர்ணயிக்கத்தக்கது. குமார்க்கங்களில் பிரவிர்த்தித்து தன்னுடைய புவர்லோக சரீரமானது தடித்த திரவியத்தாலமையப்பெறுமாகில் புவர்லோகத்தின் கீழ்த்தரமான படிகளில் தத்தளித்துக்கொண்டிருப்பான். புவர்லோகத்தில் நயமான வாஸனைகளையெல்லாம் கொள்ளமுடியாது. புவர்லோகத்தில் இந்தக் கீழான ஆசாபாசங்கள் நீங்குவதற்கு வெகு காலஞ்செல்லும். பிறகு தான் இவன் புவர்லோக சரீரத்தின் தடித்த திரவியங்கள் மடியும். ஒருவன் மட்டும் பூலோகத்தில் தன் வாழ்நாளைச் சுத்த சரியையாலும் ஒழுங்கான நடபடிக்கைகளாலும் கடத்திவருவானாயின், இறந்தபின் அவனுக்கு சிரமமேற்படாமல், புவர்லோகத்தில் மேற்கதியை விரைந்து பெறுவான்.

இரண்டாவது கவனிக்கவேண்டிய விஷயம், இறந்தபின் அவனுடைய மநநிலை என்பதாம். ஸாதாரணமாய் அநேகருக்கு இவ்விஷயம் முக்கியமானதென்று படுகிறதில்லை. புவர்லோக வாஸி கவனிக்கவேண்டியதென்னவென்றால் தம்முடைய ஆத்மாவானது ஈசுவரனின் பூர்ணத்துவத்தைப் பெறும்பன்று பிரயாணமாகும் பெரிய பாதையில் ஒருபாகம் தான் புவர்லோகமென்றும், தான் மேற்செல்ல வேண்டிய பாதை வெகு தூரம் பாக்கியிருக்கிறதென்று முணர்ந்து தன்னுடைய சிந்தனைகளையெல்லாம் கீழுலகங்களாகிய பூலோக புவர்லோகங்களை நாடவொட்டாமல் ஸுவர்லோகமாகிய உயர்ந்த பதவியை நாடும்படியே செய்யவேண்டும். இத்தகைய அப்பியாஸத்தால் புவர்லோக சரீரம் தானாகவே கழன்றுவிடும்.

அநேகர் தம் சிந்தனைகளை சுத்த மாநஸிக லோகத்துக்குரியனவாக மேல் நாடவிடுகிறதேயில்லை. தாம் விட்டுப் பிரிந்து வந்த

பூலோகத்தையே திரும்பத் திரும்ப நாடுகிறார்கள். இப்படிக் கீழ் நாட்டத்தைக் கொள்வது, இவர்களை மேன்மைப் படுத்தி இவர்களின் அபிவிருத்திக்காக உழைப்பவர்களுக்கு வெகு சிரமத்தை யுண்டு பண்ணுகிறது. பூலோக வாஸத்தில் பூலோக விஷயங்களில் பிரவிர்த்திக்கும் போதெல்லாம் தம்முடைய பூலோகவாழ்வு சாசுவதம் என்ற நினைப்புடனேயே பிரவிர்த்திக்கிறமையாலும், லோகாந்தரங்களைப் பற்றிய விசாரமே வெகு பேர்களுக்கு ஏற்படாமையாலும், இறந்த பிற்பாடும் பூலோக வாஸனைகள் அவ்வளவு பலமாய் அவர்களிடம் குடி கொண்டிருக்கின்றன. ஆனால் காலம் செல்லச் செல்ல பூலோக வாஸனைகள் தாமாகவே இவனை விட்டு நழுவ யத்தனித்தாலும், இவன் கீழான வாஸனைகளைத் துறந்து மேலுலகத்துக் குரிய சிந்தனைகளைக் கொள்ளவேண்டிய திருக்க, மறுபடியும் முரண்டிக்கொண்டு பூலோக விஷயங்களிலே ரமிக்கப் பிரியப்படுகிறான். இவன் எவ்வளவு பிரயத்தனம் கொண்டாலும், விகாஸ முறையின் (Evolution) சக்தி அபாரமா யிருப்பதால், இவன் அப்பெரு வெள்ளத்தை எதிர்க்க எதிர்க்க, இவனை முன்னுக்குக் கொண்டுவந்து தள்ளியே விடுகிறது. ஆகையால் இவன் நற்கதி சீக்கிரமடையாமல் வெகு தாமஸமாயடைகிறான்.

இவ்விதம் விகாஸ முறையாகிய பிரவாஹம் இழுக்க இவன் இழுக்க, இவனுடைய ஜடமான ஸ்தூல சரீரத்தை அதாவது பிணத்தையே நாடிக்கொண்டு இருப்பானாகில் பூலோகத்திலேயே கட்டுண்டவனாவான். மேலுலக மாகிய புவர்லோகத்தில் அபிவிருத்தி யற்றவனாவான். பழையபடி அந்தப் பிணத்திற்குள் நுழைந்து உயிருடனிருக்கலாம் என்ற அறிவீன முடையானாகில் பூலோகத்திற்கே இவனைக் கட்டுப்படுத்த அது ஒரு நங்கூரமாக முடியும். அந்தப் பிணமானது புதைக்கப் பட்டால் அது அழுகி அவ்வளவும் பூராவாகக் கட்டு உலைந்து தொலைந்து போகும் வரை பூலோக வாஸனைகளிலேயே பிரியங்கொண்ட இவன் பிணத்தையே சுற்றிச் சுற்றிக் கொண்டிருப்பான். இச்சங்கடங்களை யெல்லாம் உத்தேசிக்க பிணங்களை தஹனம் செய்தலே சரியான அநுஷ்டானமாகும். அதனால் இறந்தவன் பழையபடி பழையபடி தொத்துவதற்குப் பிடி அகப்படாது.

இறந்தவன் திடசித்தனாக மேல்நோக்குவதிலேயே கண்ணாயிருந்தால் பிணத்தைப் புதைப்பதாவது, தைலம், வாஸனை திரவியம் போட்டு சவத்தைக் காப்பாற்றி வைப்பதாவது இவனுடைய மேற்கதியைத் தடுக்க இயலாதாயினும், கொஞ்சம் பூலோகத்தில் பற்றுள்ளவனை, இன்னும் அதிகமாக்கிக்கொள்ளும்படி தூண்டுகிறது. வாஸனைத் திரவியங்களால் பிணத்தைப் பத்திரப்படுத்திவிட்டால் இறந்தவன் எப்போதும் புவர்லோகத்திலேயே தங்கி அதற்கு மேலே ஏறமாட்டான் என்று நினைப்பதும் தவறாகும். பிணத்தை எவ்வித ஸம்ஸ்காரம் செய்தாலும் விகாஸமுறையின் சக்தி பலமுள்ளதாகையால், இறந்தவன் பூலோக வாஸனைகளைக் கொஞ்சகாலம் நாடிப் பிறகு பயன்படாமையால் மேற்சென்றே தீருவான்.

பிணங்கள் தஹநம் செய்யப்பெறுவதில் விளையும் அநேக நன்மைகளில் அடியில் வருவன சில முக்கியமானவை. இறந்த ஆவி திரும்ப, அசுத்தமான இந்தப் பிணத்தில் நுழையவும் வெகு சொற்ப காலம் உயிருடனிருப்பதுபோலக் காண்பிக்கவும், ஆபிசாரவித்தை (Black magic) அப்பியஸிப்பவன், இந்தப் பிணத்தைக்கொண்டு, புவர்லோகவாஸியை இழுத்து அநேக தீச்செயல்கள் புரியவும் அஸாத்தியமாகும்.

B. S. R. சுப்பிரமணியன்.

---

## நன்மொழி.

---

பழையன கழிதலும் புதியன புகுதலும்

வழுவல் கால வகையினானே.

# ஏன் குருநாதன் என்னை ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது?

(77-ம் பக்கத் தொடர்ச்சி.)

குருநாதனை இதைச் செய்யும்படி விரும்புவது ஒரு கல்லூரி (காலேஜி) யின் தலைவரையாவது, ஒருதேசத்துக் கல்வி யிலாகாவின் தலைவரையாவது, அரிச்சுவடி படிக்கும் பையனுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுக்க விரும்புவதை யொக்கும். குருநாதன் ஏக காலத்தில் ஆயிரக்கணக்காகச் சேர்ந்துள்ள மனிதர்களின் கூட்டத்தைப் பற்றிய விஷயங்களில் நம் அறிவுக்கெட்டாத விதமாகப் பிரவிர்த்தித்துக் கொண்டிருக்கிறார்; ஆகையால் நம்மெல்லோருக்கும் மொத்தத்தில் நன்மை பயப்பதைக் கவனிக்கவேண்டுமேயொழிய நம்முடைய சுய நலத்தை மட்டும் கருதக்கூடாது. ஒரு பெரிய தேசத்தின் கல்வி இலாகாவுக்குத் தலைமையாயிருந்து நடத்தும் உத்தியோகஸ்தனொருவன் தன்னுடைய காலத்தை, ஒரு சிறு பையனுக்காவது அல்லது இருபது முப்பது சிறு பையன்களுக்காவது பாடஞ் சொல்லிக் கொடுப்பதில் செலவழித்தல் முற்றிலும் மதியீனமாகும். குருநாதன் முன்னேற்றத்திற்கு வரக் கூடிய ஒருவனைப் பார்த்தால் அவனைப் பற்றித் தன் மனதில் ஒருவிதமாகக் கணக்கிடுவாரென்று நாம் எண்ணிலோம். குருநாதன் தன் மனதில் அவனைப்பற்றி அடியிற் கண்ட விதமாகத் தனக்குள் தானே சொல்லிக்கொள்வாரென்று அவரிடம் மரியாதையுடன் நினைப்போம். "நான் அவனை ஏற்றுக் கொண்டால் அவன் விஷயத்தில் இவ்வளவு நேரத்தைச் செலவழிக்க வேண்டும். அந்தக் காலத்திற்குள் நான் இவ்வளவு வேலையை உலகத்திற்கு விஸ்தாரமாகச் செய்யலாம். ஆனால் குறிப்பிட்ட இன்ன நிலைமைக்கு அவனைக் கொண்டு வந்தால் நான் அவன் விஷயத்திற் செலவழித்த காலத்திற் செய்திருக்கக் கூடிய வேலையையும் விட, நாளடைவில், அதிகமான வேலைகளைச் செய்ய அவன் சக்தி யுடையவனாயிருப்பான். ஆகையால் அவன் ஒரு நல்ல முதல் (வட்டியைக் கொடுக்கக் கூடிய ஊளதியம்)."

ஏற்றுக் கொள்ளப்படுதலானது அபேக்ஷகள் அடைந்திருக்கும் பக்குவத்தை முற்றிலும் பொறுத்ததாக விருக்கிறது. பின்னுவ்

அவன் எவ்வளவு வேலையைச் செய்ய சக்தியுள்ளவனா யிருப்பானெ ன்பது மட்டுமல்ல; ஆனால் இப்போது இவ்விடத்தில் அவனை எவ்வ ளவுதூரம் உபயோகிக்க முடியும் என்கிற கேள்வியும் கூட உண் டாகிறது. இங்கு இதற்கோர் உதாரணத்தை யெடுத்துக் கொள் வோம். குருநாதன் அவருடைய வேலைகளில் இத்தூலப்பிரபஞ்சத் தில் வெளிப்படையான ஓர் காரியசித்தியை விளைவிக்க எண்ணுகிறார். அதாவது ஒரு பட்டணத்திற்குத் தன் சூக்ஷ்ம சக்திகளை அனுப்ப நினைக்கிறதாக வைத்துக்கொள்வோம். அரூப அல்லது பிரக்ஞான பூமிகளில் அவர் வேலை செய்து கொண்டிருக்கிறார். எப்படி ஸ்தூல உலகத்தில் இவ் வேலையைச் செய்து முடிப்பது? இதற்கு அநேக வழிகளிருக்கின்றன. அவர் பிரக்ஞான பூமியிலிருந்து கொண்டே தன் சக்திகளைக் குறித்த இடத்திற்கு நேரே, அவ்வரூப உலகத்திற் செலுத்தி அங்கிருந்து இடையேயுள்ள சூக்ஷ்ம உலகங்களின் வழி யாக ஸ்தூல உலகத்திற் சேரும்படி பலமாக அழுத்தி அச்சக்தியை அனுப்பலாம். இவ்விதம் செய்வதில் குருநாதன் சக்திகள் அதிக மாகச் செலவழியும். அல்லது தூரத்திலுள்ள ஒரு சிஷ்யனைத் தானிருக்கும் பிரக்ஞான பூமியில் தருவித்து அவனுக்குச் சக்திகளைக் கொடுத்து குறிப்பிட்ட இடத்திற்கு அவனைச் சூக்ஷ்ம சரீரத்திற் போகச்செய்து அவ்விடத்தில் அச்சக்திகளை ஸ்தூல சக்திகளாக மாற்றிக்கொள்ளும்படி செய்யலாம். இதில் குருநாதன் சக்திகள் அதிகமாகச் செலவழியா. ஆனால் சிஷ்யனுடைய சக்திகள் வேண்டிய அளவுக்கு அதிகமாகச் செலவழிய நேரிடும். இதை யெல்லாம் விட்டு மற்றொன்றை யோசிப்போம். அதாவது அந்தப் பட்டணத்தில் குருநாதனுக்கு, இப்படிப்பட்ட பெரிய வேலைகளைச் செய்வதற்குப் பொருத்தமாயுள்ள ஒரு வித்யார்த்தி (Student) இரு ப்பதாக வைத்துக் கொள்வோம்; அப்போது குருநாதன் என்ன செய்வாரெனில், மேற்சொன்ன பிரக்ஞான பூமியி லிருந்துகொண் டே அவனை யொரு கால்வாயாக (மார்க்கமாக)க் கொண்டு அவனு டைய சூக்ஷ்ம சரீரத்தில் தன்னுடைய சக்திகளைச் செலுத்தி, அச் சூக்ஷ்ம சக்திகளைத் தூலசக்திகளாக மாற்றிக்கொள்ளும்படி செய்து அக்காரியத்தை நிறைவேற்றச் செய்வார். வித்யார்த்தியா யிருப்ப வனுடைய ஜீவன் குருநாதன் தனக்களித்திருக்கும் கண்ணியத்தை

அறிகிறபடியால் அவன் உடனே அவர் எண்ணப்படி அக்காரியத்தை முடிப்பான். ஆனால் குருநாதன் ஜீவனுக்குக் கொடுத்திருக்கும் கௌரவம் அஜ்ஜீவனுடைய ஸ்தூலதேகத்தின் மூலே சம்பந்தப்பட்ட அறிவுக்குத் தோற்றியிராது. அப்படி யிருந்த போதிலும், தான் எப்படியோ மேன்மையையும், எதிர்பார்த்திரா வண்ணம் சந்தோஷத்தையும் அடைந்திருப்பதாக அவ்வறிவுக்குப் புலப்படும். அவ்வித உணர்ச்சிகள் வித்தியார்த்தியொருவனுக்குண்டாகும்போது அவன் தன்மூலமாக உலகத்துக்குச் சிறிது அருள் அனுப்பப்படுகிறதென்று உறுதி கொள்ளலாம். ஒரு வித்யார்த்தி காலேயிலெழுந்திருக்கும் பொழுது அதிக மனச்சமாதானத்தோடும் ஆனந்தத்தோடு மெழுந்திருப்பானுயின் அவன் தன் மூலமாகச் சில நன்மைகள் செய்யப்பட்டிருக்கின்றனவென்று அறிந்து கொள்ளலாம்.

இவ்விதமாக அடிக்கடி உபயோகப்படுத்தக் கூடிய ஒருவனைக் குருநாதன் கவனிக்கிறார் என்றும், அவன் அவரால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடுமென்றும் தெரிந்து கொள்ளலாம். மனிதர்கள் துரதிருஷ்டகரமாக, குருநாதன் தங்களே உபயோகிக்க முடியாத நிலைமைகளிற் செய்துகொள்ளுகிறார்கள். அவ்வித மனிதர்களிருக்குமிடத்திற்குச் சமீபத்திற் செய்யப்படவேண்டிய வேலைகளுக்காக குருநாதன் அவர்களை நோக்கும்போது அவர்கள் பிரயோஜனப்படுகிறதில்லை. ஆகையால் அப்பாக்கியத்தைப்பெற வேறு யாரையாவது அவர் தேடவேண்டி யிருக்கிறது, குருநாதன் காரியங்களுக்கு ஒரு வித்யார்த்தியை உதவாமற் செய்யும் காரணங்கள் யாவையென்பதைப்பற்றி கவனிப்பதுடன் ஏன் சில சமயங்களில் அவவித நிலைமைகள் உண்டாகின்றன வென்பதையும் அவைகளைச் சீர்திருத்திக் கொள்ளும்பொருட்டுக் கவனிப்போம்.

முதலில் நமக்குள்ள பலவித சரீரங்களும் அவைகள் ஒன்றிற்கொன்று எவ்விதத்தில் சம்பந்தமுடையனவா யிருக்கின்றன வென்பதை ஆராய்வோம். நாம் அவைகள் ஒவ்வொன்றையும் பிரத்யேகமான உலகங்களிற் தொழில் செய்துகொண்டிருக்கும் தனித்தனி சரீரங்களென்று நினைப்பிலும் செய்கையிலும் கொண்டு நடப்பதுமன்றி அவைகளெல்லாம் ஒன்றாகக் கலந்திருக்கின்றனவென்பதை

முற்றிலும் மறந்துவிடுகிறோம். பிரகிருதிகளெல்லாவற்றையும் உற்றுப்பார்க்குமிடத்து அவைகளுக்கெல்லாம் மூலம் ஒன்றாகவேயிருக்கிறது. ஸ்தூல உலகத்தில் தோற்றப்படும் வஸ்துக்களெல்லாம் ஒரேவிதமான ஸ்தூல அணுக்களால் உண்டாக்கப்பட்டவை; ஆனால் அவைகள் ஒன்றற்கொன்று வித்யாசமாகத் தோற்றப்படுவதற்குக் காரணம் அவ்வணுக்களை அமைத்த ஒழுங்காகவே யிருக்கிறது. அதுபோல பூலோக முதல் சத்யலோக பர்யந்தமுள்ள எல்லா பிரகிருதிகளும் ஒரேவிதமான அணுக்களால் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு உலகத்தின் பிரகிருதிக்கும் மற்றொருலகத்தின் பிரகிருதிக்கும் வித்யாசம் அணுக்களமைக்கப்பட்டிருக்கும் ஒழுங்கின் மாறுபாட்டைத் தவிர வேறொன்றுமில்லை. ஆகையால் நம்முடைய பலவித சரீரங்களும் (மேற்சொன்னபடி அணுக்களின் அமைப்பில்) ஒன்றுக்கொன்று ஊடுருவிக்கலந்துள்ள ஒரே சரீரமெனவும் அவைகளின் பாகங்களெல்லாம் ஒன்றுக்கொன்று நெருங்கிக் கலந்திருக்கின்றனவென்றும் சொல்வது உண்மையில் சரியானதாகவிருக்கிறது.

நம்முடைய ஸ்தூலசரீரத்திலிருந்து இதற்கொரு திருஷ்டாந்தத்தை யெடுத்துக்கொள்வோம். நாம் பார்க்கிற இத்தூல சரீரமானது மாமிசத்தாலாகிய ஒருருவமாயினும் அது நம் பார்வைக்கு முற்றிலும் ஒரு கடின பதார்த்தத்தாற் செய்யப்பட்டிருப்பதுபோற் தோன்றுகிறது. அதன் எந்தப்பாகத்திலாவது சொற்ப காயம் ஏற்பட்டாலும்கூட உடனே இரத்தத்தைச் சிந்தும்படி இவ்வுடல் முழுமையும் திரவபதார்த்தமும் ஊடுருவிப் பரவியிருக்கிறதென்பதை நாமறிவோம். அவ்விதம் பரவியிருக்கும் இரத்தத்தை அவ்வவ்விடங்களிலேயே அப்படியே வைத்துவிட்டு மாமிசத்தை மட்டும் தேகத்திலிருந்து எடுத்துவிடக் கூடுமாயின் (கூடாத காரியம்) முற்றிலும் இரத்தத்தாலாகிய ஒரு சரீரத்தையும், அவ்விரத்த சரீரத்தில் ஊடுருவிப் பரவியிருக்கும் காற்றை மட்டும் அப்படியேயிருக்கச்செய்து இரத்தத்தை மட்டும் எடுத்துவிட்டால் காற்றாலாகிய ஓர் சரீரத்தையும் அக்காற்றாலாகிய சரீரத்தில் வியாபித்திருக்கும் ஆவியைமட்டும் வைத்துவிட்டு காற்றை எடுத்துவிட்டால் ஆவியாலாகிய ஓர் சரீரத்தையும் நாம் அடையக்கூடியதாக இவ்வுடல் முழுவதும் மாமிசம், இரத்தம், காற்று, ஆவி ஆகிய இவைகள் ஒத்து

புரோதமாகக் கலந்திருக்கின்றன. இவைகளெல்லாம் ஒன்றுசேர்ந்துதான் ஒரு ஸ்தூல உடலாகிறது. இவ்வுடலிற் கலந்திருக்கும் எந்தப் பதார்த்தத்திற்காவது ஒரு கெடுதியைச் செய்யவேண்டுமானல் மற்றவைகளுக்கும் கெடுதியுண்டாக்காமற் செய்யமுடியாது. அதுபோலவே ஸ்தூலதேகம், சூக்ஷ்மதேகம், காரணதேகம் என்று நாம் சொல்லுகிற இக்கோசங்களெல்லாம் ஒன்றற்கொன்று ஊடுருவிக் கலந்திருக்கிறபடியால் அவைகளி லேதாவதொன்றைமட்டும் மற்றவைகளுக்குச் சம்பந்தமன்றியில் இயங்கச்செய்யமுடியாது.

ஆகையால் குருநாதனுடைய அருள்சக்திகள் பாய்வதற்குத் தானொரு வாய்க்காலாக அமையவேண்டுமென்று நினைக்கும் மனிதன், தன்னுடைய எல்லாச் சரீரங்களையும் ஒருமிக்கச் சாந்தமாயும் பொருத்தமாயுமுள்ள நிலைமைகளில் வைத்துக்கொள்ளவேண்டும். அவ்வித நிலைமையைத் தடுக்கும் எதுவும் இச்சரீரங்களேதாவதொன்றிலுண்டானலும் அது குருநாதனுடைய வேலைகளைத் தடைப்படுத்தும்.

மிகவும் சாதாரணமாயுள்ள தடை தொல்லை; அதாவது மனச்சஞ்சலம். தொல்லைக்காவது கவலைக்காவது இடங்கொடுக்கும் மனிதன், தனது மனேசரீரத்துக்கு ஒரு அமைதியற்ற நிலைமையையுண்டுபண்ணுகிறான். சூக்ஷ்ம திருஷ்டியால் நோக்குமிடத்து அச்சரீரமானது புயல்காற்றல் அலைக்கப்பட்ட ஓர் சமுத்திரத்தை ஒத்ததாகவிருக்கிறது. குருநாதன் இவ்வித சரீரத்தை உபயோகிக்கவேண்டுமானல், உபயோகிப்பதற்குமுன் அதை ஒரு சாந்தமான நிலைமைக்குக் கொண்டுவரவேண்டும். அவ்விதம் செய்ய மேற்சொன்ன விதமாயுள்ள சமுத்திரத்தை அமைதியாகச் செய்வதற்கு எவ்வளவு சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டுமோ அவ்வளவு சிரமத்தை எடுத்துக்கொள்ளவேண்டும். இவ்விதம் சிரமத்தை எடுத்துக்கொண்டு தன் சக்திகளைச் செலவிட்டு ஒருவனைத் தயார் செய்வதைக் காட்டிலும் முதலிற் கூறியபடி அவர் தன் சக்திகளைச் செலவழித்துத் தானே நேரில் அக்காரியத்தை முடித்துவிடலாம். ஆகையினலேயே அவர் இவர்களை விட்டுவிட்டு வேறு வழியைத் தேடுகிறார்.

மிகவும் சாதாரணமாயுள்ள மற்றொருதடை சுயநயம் கருதல். எவனொருவனுடைய எண்ணமானது தன்னைப்பற்றி நினைப்பதிலே யே செலுத்தப்படுகிறதோ அவனிடத்தில் சக்திகளெல்லாம் வெளிப் பரவாமல் உள்நோக்கியே செல்கின்றன. அப்படிப்பட்ட மனிதனை குருநாதன் உபயோகிக்கவேண்டுமானால், நீண்டகாலமாக அவனி டம் உள்நோக்கியே சென்றுகொண்டிருக்கும் சக்திகளைத் தடுத்து அச்சக்திகள் வெளிநோக்கிச் செல்லும் வழக்கத்தை முதலில் அவ னிட முண்டாக்கவேண்டும். ஆகையா லிம்மனிதனையு முபயோ கிக்க முடியாதென்று நன்கு விளங்குகிறது. எவனொருவனிட மிருந்து எல்லாச் சக்திகளும் மற்றவர்களை நோக்கி வெளிப்பரவு கின்றனவோ அவனைத்தான் குருநாதன் விரும்புவார். ஏனெனில் அவனிடமிருந்து சக்திகளெல்லாம் வெளிப்பரவிக்கொண்டிருப்ப தால், குருநாதன் தன்னுடைய சக்திகளை அவனிடம் செலுத்திட்டு அம்மனிதனிட மிருந்து வெளிக்கிளம்பிப் பரவிக்கொண்டிருக்கும் சக்திகளுக்கு அதிக பலத்தைக்கொடுக்கச் சுலபமாகவிருக்கும்.

மற்றோரம்சம் என்னவெனில் ஒருமனிதன் விகாசமுறையில் சிறி தளவும் தேர்ச்சியடையாமல் ஆதி நிலைமையி லிருந்தாலொழிய சுய நயம் கருதும் நிலைமையில் எப்போதும் தடைகள் ஏற்படக் கார ணங்களுண்டாகுமென்பதே ஜீவாத்மா (Ego) வானது விகாச முறையின் சிரமத்தைச் சிறிது அறிந்திருப்பதால் அதன் எண்ணம் அம்முறைக்கு ஒத்ததாகவிருக்கிறது. மேலும் தன்னுடைய சாயை அல்லது பகுதியாகிய ஸ்தூல பிரபஞ்சத்திலுள்ள ஜீவனை (Personality) தன்னால் கூடியமட்டும் விகாஸமுறைக்கு ஒத்த வழியில் நடத்துகிறது. ஆனால் ஸ்தூலதேகத்தில் வியவகரிக்கும் ஜீவன் கட் டுக்கடங்காமற் செல்லும்போழ்து அச்செய்கை ஜீவாத்மாவின் எண் ணத்துக்கு மாறுகவிருக்கிறது. அஜ்ஜீவாத்மா அதை (Personality) நடத்துதற்கமைந்துள்ள கடிவாளங்கள் இன்னம் உறுதியடையாம லிருப்பதால் அக்கடிவாளத்தை அதிகமாக இழுத்துப்பிடிக்க முடி கிறதில்லை. அவ்விதம் செய்தாற் கடிவாளம் அறுந்துபோகுமென்று ஆத்மாவுக்கு நன்ருகத் தெரியும்.

(இன்னும் வரும்.)

ஆத்தங்குடி M. ஸ்வாமிநாதையர்.

100

# சங்கமும் மெய்பரும்.

இங்கிலவுலகத்துள்ள எல்லாச்சங்கங்களினும் பிரஹ்மஞான சங்கம் பல்லோர்க்கும் பயன் படுவதெனப் பகுத்தறிவுடையார் கூறுவர். இச்சங்கத்தை, எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளின் இணையடித்துணைவராய் இமாசலத்தின் பிரதேசங்களிலுள்ள வெள்ளியம்பலத்தவராகிய, மநு முதலான மஹரிஷிகள், உலக விகாஸ முறையில் நம்மை நல்வழிப்படுத்துதற்குக் கருணைகூர்ந்து, தமது கூட்டத்துள் போதநீதிப் புலமை வாய்ந்த, மரு, தேவாபி என்னு மிருவரால் பூமி முழுவதும் பரவச் செய்ய விரும்பின ரென்றும், அவ்வாறே அன்னர் விகாசமுறையினுயர்ந்து விளங்கிய மாதுஸ்ரீ (H. P. B.) ஹெலினம்பாள் அம்மையார், ஸ்ரீமான் கர்னல் ஆல்காட்டு, என்னு மிருவரையும் தமக்கு முக்கிய சீடராகக் கொண்டு, 1875-ம் வருஷம் நவம்பர் மீ 17உ அமெரிக்காவில் ஐக்கிய மாகாணத்தின் கண்ணுள்ள நியூயார்க் கென்ற நகரில் முதன் முதல் இச்சங்கத்தை ஸ்தாபித்தன ரென்றும்; அதன் பிறகு 1882-ம் வருஷம் சென்னையைச்சார்ந்த அடையாறு என்னும் அடையாற்றில் பிரஹ்மஞான சாசுவதாலயத்தை நிறுவினர்க ளென்றும் அறிகிறோம்.

அதன்பிறகு 1889-ம் வருஷம் மேமீ 10உயில் நமது ஹெலினாம்பாளம்மையாருக்கு அவர்களெழுதின "குப்த சாஸ்திரத்தின்" (Secret Doctrine) பிரபாவத்தால் மனமொழி மெய்களாகிய திரிகரணமும் ஒன்றுபட்டு, உண்மைச் சீடரும் ஷை சங்கத்தின் அங்கத்தினருமாகிய எங்கிலத்தும் புகழ்பெற்ற அன்னிபெசண்டம்மை 1893-ம் வருஷம் நவம்பர் மீ 19உ தூத்துக்குடி மார்க்கமாக இந்தியாவுக்கு வந்தனர்.

அது முதல் இது காறும், மனிதராகிய, நாமெல்லோரும் ஈசுவராம்ச முடையவர்க ளென்றும், நம்முள் ஆண், பெண்ணென்ற பால் வேற்றுமையும், பௌத்தன், சைவன், வைணவன், முகமதியன், கிரீஸ்துவன், என்ற சமய வேற்றுமையும், கறுத்தவன், வெளுத்தவன், என்ற நிறவேற்றுமையும், இந்தியன், இங்கிலீஷ்காரன், ஐரோப்பியன், பிராஹ்மணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், என்ற ஜாதி வேற்றுமையும், இவை போன்ற மற்றைய வே

ற்றுமைகளையும், துவேஷங்களையும் கொள்ளலாகா தென்றும் "சாதி சமயச் சழக்கெற்றிந்தோரருட் சோதியைக்" காண்பார்க ளென்றும், நம்மிடம் குப்தமாக மறைந்துள்ள சக்திகளை ஞானமுறைகளின் அப்யாசத்தால் நாமே வெளிப்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும், எம்மதத்தரும், எச்சாதியரும், எவ்வருணத்தரும், முடிவில் ஒரு மதத்தர், ஒரு சாதியர், ஒரு வருணத்தரே என்றும், ஆன்மா என்ற நினைவு உண்டாகாமல், நாம் சரீரமென்ற பாவனை உலகத்தில் வழங்கும் வரை, சகோதரத்வம் நிகழாதென்றும், மனிதராய்ப் பிறந்திருக்கு மனைவரும் ஓரே தாய் தந்தையரின் மக்களென்றும், இப்பிரஹ்மக்ஞான சபை உலகிலுள்ள எல்லா மதத்திற்கும் சார்பானதென்றும், இதற்கொருமதமும் துவேஷமுடையதன்றென்றும், உலகில் வழங்கும் பல மதஸ்தர்களும் இச்சங்கத்தின் அங்கத்தினராவதற் குரியவரென்றும், அவரவர் பிறந்துள்ள மதத்தின் உண்மைகளை அறிந்து அவைகளை அநுஷ்டிப்பதற்கு இச்சங்கம் மிகவும் சாதகமானதென்றும், சுமார் இருபது வருஷகாலமாக, தினைத்துணையுங் கைம்மாறு கருதாது, இராப்பகலாய், ஒய்வு ஒழிவின்றிச் செய்த இச்சத்தியஞான உபந்யாசத்தாலன்றோ நாஸ்திக புத்தியுள்ள அயல் நாட்டிலும் நம்நாட்டிலுமாக இதுவரை சுமார் 1500 கிளைச்சங்கங்களேற்பட்டதென்றும்; இருபத்திராயிரத் தெண்ணூறுபேர்கள் மெம்பரானூர்க ளென்றும் தெரிகிறோம்.

இவ்வாறுணர்ந்த இச்சங்கத்தினங்கத்தினராகிய நாம், நம்முளிருக்கும் சில குறைபாடுகளை நீக்க முயன்றோமில்லை; அதாவது, மெம்பர்களாகிய ஆண் பெண்களடங்கலும் எந்நாட்டாரேனும், எவ்வூராரேனும், எச்சாதியாரேனும், எக்குலத்தாரேனும், எம்மதத்தாரேனுஞ் சம்மதமாய், ஒரு நாட்டாரும், ஓரூராரும், ஒரு ஜாதியாரும், ஒரு குலத்தாரும், ஒரு மதத்தாரும் போல அபேதம் பெற்று, சமரச சன்மார்க்கம் பூண்டு, ஒருவருக் கொருவர் கொள்வன கொடுப்பனவுடன் சமபோஜனம் செய்தொழுகாக்கால், நாம் வாய்ப் பேச்சால் மட்டுங் கொண்ட சகோதரத்வமும், ஒற்றுமையும் எவ்வாறு முற்றுப் பெறு மென்பதை நண்பர்க ளொவ்வொருவரும் கவனிக்கக் கடவர்.

. . . . . . .

நம்முன் முதற் குலத்தா ரென்ற பெயரை மட்டிலும் வைத்துக் கொண்டிருக்கும் பிராஹ்மணர்களாவது, ஒரு ஜாதி, ஒரு குலம், ஒரு மதத்தினரா? ஸ்மார்த்தர், வைணவர், மத்வர், எனமும் மதத்தினராய்; அவருள்ளும், திராவிடர், ஆந்திரர், கன்னடர், தேசஸ்தர், எனப் பாஷையாற் பலவிதத்தினராய், அவற்றில் ஸ்மார்த்தருள் வடமர், அஷ்ட சஹஸ்ரத்தர், பிரகத் சரணத்தர், தீக்ஷிதர், முக்காணியர், எனப் பற்பல தொகுதியரும், அவர்களொவ்வொருவருக்குள்ளும் பற்பல பகுதியருமாய்க் காணப்படுகின்றனர்.

வைணவர்களிலோ, வடகலை, தென்கலை, என்ற பெரு வழக்கு இதுகாறுந் தீராததோடு, போஜன விஷயத்திலும் ஒவ்வொருவருந் தங் குறுக்கே திரை கொண்டவராய் விட்டதோடு ஆண்மக்களே யன்றிப் பெண்மக்கள் சமைத்த சமையலைப் பெரும்பான்மையும் அனைவரும் உட்கொள்ளுவதில்லை.

மத்துவ மதத்தருள்ளும் பல வேறு பிரிவுகளும் பற்பல கொள்கைகளு மிருந்த போதிலும், ஸ்மார்த்தரைப் போன்ற ஒற்றுமையான சமபோஜன முண்டு, இவர்களுக்குள் அதி சமீபத்தில் நீக்கிக் கொள்ள முடியாத பிராண பரித்தியாக விரதங்களையும், கொடிய ஆசாரங்களையும், பற்றி நான் இங்கு கூறவரவில்லை.

இம்மும்மதத்தினரான பிராஹ்மணப் பெயர்களை யுடையவர்களாவது, ஒருவருக்கொருவர் துவேஷமின்றி ஒரு மனப்பட்டுச் சமபோஜனமும், கொள்வன கொடுப்பனவும், ஒரே உடை நடையும், ஒரு பாஷையும் பெறுவராயின், அதி சீக்கிரத்தில் விகாஸமும் பெறலாம், இம்முத்திறத்தாரன்றி இவருள் ஒரு மதத்தினரேனும் தம்முள் நிகழும் உட்பிரிவுகளை அடியோடு நாசப்படுத்தி, கொள்வன கொடுப்பன முதலியவற்றுள் ஒன்றுபடுவரானால், அதனால் வரும் இன்பம் அளவற்றது.

இத்தகையவைகளின் மெம்பராகிய ஒவ்வொருவரும் தங்கள் தங்களது குடும்ப காரிய மென்றே நினைத்து, அவ்வாறு செய்ய முயல்வதோடு தம்மக்களுக்குத் தம் போலிய மெம்பர்கள் வீட்டிலேயே மணம்புரிகின்ற தென்ற உறுதி பூண்டு, செய்கையிலும் அதனை வழுவாது செய்து காட்டுவாராயின், இப்போதுள்ள சகித்தற்கரிய

துன்பங்கள்—அதாவது மெம்பர்களாகிய ஒவ்வொருவருக்கும் அநேகமாய் அவர்கள் மனைவி மக்கள், தாய் தகப்பன், அண்ணன் தம்பி முதலாயினோர், முற்றிலும் மாறுபாடாயிருப்பது அடியோடொழிந்து விடும். ஆனால் இது அவர் குற்றமன்று, இச்சங்கத்தின் அங்கத்தினராகிய நாம், அது சம்பந்தமான நூல்களை வீட்டிலுள்ள நமது தாய் தந்தை, அண்ணன் தம்பி, மனைவி மக்கள் முதலாயினோர்கட்காவது, பிரதிதினம், அல்லது வாரமும்முறை, அன்றே லொவ்வொரு ஞாயிற்றுக் கிழமை மாலைகளிலேனும், அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டு, ஒருமணிநேரம் நியதியாய் அவர்களுக்குள்ள சந்தேக விபரீதம் அற, மனதிற் படியும்படி, சாவதானமாய்ப் படித்து வந்தால் இவ்வொரு முயற்சியினாலேயே நமது குடும்பத்தாரில், ஒவ்வொருவர்களுக்குமுள்ள வித்தியாச விபரீதங்கள் நீங்கி, நீக்கமின்றிய அன்பாற் கட்டுண்டு விகாஸத்தை அடையலாமென்பது சத்தியம்.

இதுகாறும் இவ்விதம் செய்யாதிருப்பது நம்முடைய குற்றமே என்று நாமுணரவேண்டுவதோடு, நம் பெண் மக்களுக்கு அறிவுறுத்துவதொன்றுண்டு. அதாவது "ஆவியின்றி உடல் இல்லை. உடல் இன்றி ஆவியில்லை, அதுபோல், பர்த்தா, தேவி எனுமிருவருஞ் சேர்ந்து ஒருருவாம்; செழுமலரும், தேனும் போல மேவி, அவர் இருவருமே நள்ளாது முறண் செய்யின், விளங்கும் மெய்யும், ஜீவனும், ஒன்றோடு ஒன்று போராடி அழிந்தது ஒக்கும் செப்புங்காலே."* என்ற இதுவே.

இதற்கிலக்ஷியமாய் யான்கண்ட பிரத்தியக்ஷப் பிரமாண மொன்றை இங்கு கூறுகிறேன். சில வருஷங்களுக்கு முன் திரிச்சிராப்பள்ளிக்குச் சென்றேன். அதற்கிரண்டொரு தினங்களுக்கு முன்னர் கிறீஸ்து மதத்திற் சேர்ந்த ஒருதனுட்டிய வேதியர், தாய் தந்தை சுற்றத்தாருடைய துன்பத்தைச் சகிக்க முடியாதவராய்ச் சென்னைக்குச் செல்லுமாறு ஜங்ஷனுக்கு வந்து போட்டு மெயிலிலேறினர், அது தெரிந்த அவருத்தமமனைவியார் தன் கணவனோடு செல்லத் துணிந்து, தாய், தந்தை, மாமி மாமன் முதலாயினோர் அறியாவண்ணம் கால் நடையாய் வந்து ஸ்டேஷனுக்குட் புகுந்து

* வேதநாயகம் பிள்ளையவர்கள் நீதிநூல் புருடபார்யரியல்பு.

வண்டியேறித்தன் கணவன் காலில் விழுந்து கதறி, தன்னை விட்டுப் போவது நியாயமன்றென்றும் அம்மதமே தனக்குஞ் சம்மதமென்றும் கூறி நிற்கையில் பின்பற்றி வந்த அவ்வுத்தமியின் தாய் தந்தையர் பலவந்தமாய்த் தடுக்க முயல்கையில் அவரை நோக்கி நீவிர் எனைத் தடுப்பது தகாது. என் கணவனே எனக்குத் தாயுந் தந்தையும் வழிபடு தெய்வமும். அதுவேயுமன்றி உயிரைப்பிரிந்துழலுமுடலுண்டோ? இல்லை. அதுபோல் என் கணவன் சேர்ந்தொழுகும் ஜாதிகுல முதலியதே எனக்குமுரியது எனக்கூறித் தன் கணவனுடன் சென்றனர். இத்தகையாரன்றோ பதிவிரதப்பாவையர் திலதம். இதுநிற்க ஒரு குடியானவனது மனைவிமக்கள் முதலியோர் ஒருமித்துப் பாடுபட்டாலொழிய அவனிட்ட வெள்ளாமை வீடுவந்துசேருமா? சேராதன்றோ! அதுபோல மெம்பராயுள்ள ஒருவருக்கு அவர் குடும்பத்தாராவது அல்லது மனைவிமக்களாவது அன்றேல் மனையாளாவது ஒத்திருந்தாலன்றோ நன்மை பயக்கும். இதைச் சகோதர சகோதரிகளொவ்வொருவரும் கவனித்தொழுகுமாறு நம்மைக் காத்தளிக்கும் கடவுள் அருள்புரிவாராக.

ஆத்தங்குடி T. R. M. M. சுப்பிரமணிய ஐயர்.

---

## நன்மொழி.

---

ஒன்றே குலமு மொருவனே தேவனு  
நன்றே நினைமி னமனில்லை நாணுமே  
சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து  
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே.

## தோற்றுத் துணைவர்கள்.

(4-ம் தொகுதி 463-ம் பக்கத் தொடர்ச்சி.)

---

புவர்லோக வழியில் ராத்திரியில் உதவி செய்ய முயன்றவன் காலை தூக்கத்தினின்று விழித்த பிறகு ராத்திரியில் தான் செய்த உதவியை ஞாபகத்திற்கு கொண்டு வருகிறதில்லை. அவனுக்கு யாதொன்றும் காலையில் ஞாபகப்படுவதில்லை. உண்மையில் அவன் முயற்சி கொஞ்சமேனும் உபயோகமாவது நிச்சயம். இவ்வித உதவி தொடர்ந்து நடைபெறும்போது, அவனை உற்சாகப்படுத்தக்கூடிய சில அடையாளங்கள் தோன்றும். தான் ஞாபகமிழந்திருப்பினும், ஏதோ திட்டமான காரிய சித்திகளை நித்திரை காலத்தில் உண்டாக்கி வருவதாக ஒருவாறு தெரிந்து கொள்வான்.

அநேகர் இவ்வித முயற்சியிலிறங்கி, அதின் பயன்களை யதிக காலம் அறியாமலிருக்கின்றனர். தாம் உதவி செய்ய முயன்ற மனிதனை சில தருணங்களில் தூலமாகவே நேரில் சந்தித்து, அவன் மிகுதியும் சுகம் பெற்றிருக்கக் காண்கின்றனர். தான் சுகமடைய ஆரம்பித்த இரவை இன்னதென்று குறிப்பிட்டு, அன்று நித்திரையில் நல்ல சொப்பனமொன்று உண்டானதாகவும் தெரிவிக்கிறான். அவனுக்கு உதவி செய்யத் தாம் விசேஷ முயற்சி பூண்ட இரவும் அதுவே யென்று அறியும்போது வியப்புண்டாகிறது. ஆயினும், உபகாரியானவர் இதனை, முதலில் ஒரு தற்செயலான சம்பவமென்று கருதுகிறார். பின்பு, இவ்வாறு பல பொருத்தமுள்ள அநுபவங்களைக் காணும்போது, உண்மையில் உறுதிகொள்ள ஆரம்பிக்கின்றனர். ஆதலின் முதல் முதல் உதவி செய்யத் துவங்குவோர் தன்னாற்கூடிய அளவு பிரயாசைப்பட வேண்டும்; காரிய சித்திகளை யறிவதில் பொறுமையும் மனத்திருப்தியும் கொள்ளல் வேண்டும்.

சில ஆரம்பிகட்கு நம்பிக்கை யூட்டுகிற வேறொரு பரீக்ஷை யுண்டு. ஒருவன் தனது நண்பனின் அறையை நித்திரையின் போது சூக்ஷ்ம சரீரத்தால் தரிசிக்கத் தீர்மானித்து அங்கே சாமான்களும், புத்தகங்களும் வைக்கப்பெற்றுள்ள ஒழுங்கை சாவதானமாய்க் கவனிக்க வேண்டும். அல்லது தான் கருதாமலே ஓரிடத்தை நித்திரை காலத்தில் தரிசிக்கப் பெறின் அதனை நன்றாய்க் கவனிக்க வேண்டும். காலையில் இது அவனது நினைப்பில் தோன்றி அந்த இடத்தைப் பார்க்கும்போது விழிப்புள்ள காலத்தில் கடைசியாகப் பார்த்து வைத்த விதமாகவே யிருக்குமானால், தான் ராத்திரியில் கண்டது வாஸ்தவமோ அல்லது பழைய நினைப்போ வென்பது

அவனால் கண்டுபிடிக்க முடியாது. ஆதலின் அதைப் போய்ப்பார்ப்பதால் அவனது சந்தேகம் நிவிர்த்தி பெறாது. ஆனால் அந்த அறையில் சில மாறுதல் அல்லது ஒரு புதிய அமைப்பு ஏற்பட்டு அவனால் நித்திரையில் கண்டு கொள்ளப்பட்டால், விழித்தபின் அவ்விடஞ் சென்று தனது இராத் தரிசனம் உண்மையோ வென்று பார்த்து, சந்தேகந் தீர்தல் நலம்.

புவர்லோக உதவியில் தலையிட்டுள்ள நாங்கள் எல்லோரும் உதவிபுரியத்தக்க காரியங்களை அநேகமாய் எப்போதும் உடைத்தாயிருக்கிறோம். இவற்றுள் சில ஒரே முறையில் செய்து நிறைவேற்றக் கூடிய சத்திர சிகிச்சை போன்றிருக்கும். அடிக்கடி ஆறுதலுண்டாகி, திடப்படுத்தி பலமூட்டத்தக்க கைங்கரியமும் நாள்தோறும் செய்ய நேரிடுகின்றது. இவ்வாறு செய்தல் மன நோயைக் குறைத்து, தைரியமும் மேன்மையும் உண்டாக்குதற்காம். சிலதருணங்களில் மனோ நிலைக்கேற்ப கொஞ்சம் கொஞ்சமாய் ஞானமூட்டவும் நேரிடுகின்றது. ஆகவே புவர் லோகத்தில் கைங்கரியஞ் செய்யும் ஒவ்வொருவரும் நாள்பட்ட நோயாளி போன்றவர்களையும், தம் வகுப்பைச் சேர்ந்தவர் போன்றவர்களையும், ரோகிகள் போன்றவர்களையும் உடைத்தாயிருக்கிறார்கள். ஒரு வைத்திய பண்டிதர் தம் சிகிச்சையின் கீழுள்ள நோயாளிகளைக் கிரமமாய் சுற்றிப்பார்ப்பது போலவே, புவர்லோக உபகாரி பிரதி இரவிலும் தன் சிகிச்சையிலுள்ளோரைத் தரிசிக்கிறான்.

இவ்விதம் உதவி செய்யப் பெற்றவர்கள் உதவி செய்தோரிடம் நன்றியுள்ளவர்களாய் அவர் செய்யுங் கைங்கரியத்திற்கு தாமும் உதவியாய் நின்று. தாமடைந்த நன்மைகளை மற்றையோரும் அடையச் செய்வதுண்டு. இஃது பல முறையும் சம்பவிக்கின்றது. ஆதலின் ஒவ்வொரு உபகாரியும் தங்கீழிருந்து உதவி செய்யும், ஒரு சிறு கூட்டத்தாரின் தலைவராயிருக்கிறார். அக்கூட்டத்தாருக்கு இடைவிடாத கைங்கரியத்தையும் கண்டு பிடித்துக் கொடுக்கிறார். இறந்தவர்களிற் பலர் இருட்டைக் கண்டஞ்சும் குழந்தைகளைப்போலிருக்கிறார்கள். அஞ்சத்தக்க வொன்றுமில்லை யென்று அவர்கள் மனதிற்படுமாறு நியாயங்களையுதாகரித்து, பொறுமையாக ஒருவர் எடுத்துக்காட்டலாம். ஆனால் ஒரு பெரிய நியாயோத்தாரண பிரசங்கத்தைவிட ஒரு குழந்தைக்குப் பக்கத்தில் எப்போதும் துணையாயிருந்து பற்றிக் கொண்டிருப்பவரின் கையே விசேஷித்தது.

(இன்னும் வரும்) அ. நம்மாழ்வார்.

## புத்தக வரவு.

அகமே புறம்:—இந்தப் புஸ்தகம், நம்மவர்கள் ஒவ்வொருவரும் நன்றாய் வாசித்து, சிந்தித்து, அநுஷ்டானத்திற் கொள்ளவேண்டிய விஷயங்களை யடக்கியிருப்பதுமன்றி, சிறந்த தமிழிலும், நேர்த்தியான ஸ்வதேசிய கைத்தொழில் முயற்சியாலான கடிதங்களில் அழகான முத்துப்போன்ற அக்ஷரங்களால் அச்சியற்றப் பெற்றுள்ளது. இதன் கிரந்தகர்த்தர் ஸ்ரீமாந். வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள். இப்புத்தகத்தின் விலை அணா 8. வி. பி. சார்ஜ் அணா 2. வேண்டுவோர் "வ. உ. சிதம்பரம்பிள்ளையவர்கள், மைலாப்பூர், சென்னை" என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

காதலி:—இது, ஞானகாந்தி, மதிமாலினி, குசாவதி முதலிய நாவல்கள் எழுதிய செ. இராஜு செட்டியார் எம். பி. பி. ஓ. அவர்களா லியற்றப்பட்டது. இது ஒரு நல்ல நாவல். நாவல்கள் வாசிப்பதில் பிரியமுடையோர் ஒவ்வொருவராலும் இப்புஸ்தகம் வாசிக்கத்தக்கது. இதில், மேனாட்டாருடைய வீண் ஜம்பத்தை மட்டும் கைக்கொண்டு நம்மவர் நடைபெறுவதின் இழிவு நன்றாய் விளக்கப்பட்டிருக்கிறது. இப்புத்தகத்தின் விலை அணா 12. வேண்டுவோர் "செ. இராஜு செட்டியார், எம். பி. பி. ஓ. ராஜண்டேல் வால்டாக்ஸ்ரோட், சென்னை" என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

## சமாசாரம்.

காசியில் அன்னிபெஸண்டு அம்மையவர்கள் (Central Hindu College) என்றும் (Central Hindu Girls' School) என்றும் இரண்டு கலாசாலைகளை ஸ்தாபித்து 16 வருஷங்கள் வரை லக்ஷலக்ஷமாய் செலவழித்து மஹோன்னதமான நிலைமைக்கு கொண்டுவந்தபின் அவர்கள் அவைகளை அன்புகூர்ந்து ஹிந்து ஸர்வகலாசாலைச் சங்கத்துக்குக் கொடுத்துவிட்டபின் ஷை காசியிலேயே (Theosophical Collegiate School என்றும் Theosophical Girls' School) என்றும் நூதனமாய் இரண்டு கலாசாலைகளை ஸ்தாபித்திருக்கிறார்கள். அவைகளில் (Theosophical Collegiate School) என்னும் கலாசாலை அலஹபாத்து யூனிவர்ஸிடிக்கு சேர்ந்த ஹைஸ்கூலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது. ஷை கலாசாலை மேன்மேலும் விருத்தியடைந்துகொண்டு வருகிறது. அடுத்த வருஷம் (Collegiate Classes) ஏற்படுத்துவதாக உத்தேசிக்கிறார்கள். அதற்கு ஏராளமான பொருளுதவி தேவையாயிருக்கிறதாம். வித்தியாபிவிருத்தியில் சிரத்தையுள்ள எல்லா கனவான்களும் தங்களால் இயன்றமட்டும் திரவியசகாயம் செய்யும்படி வேண்டுகிறார்கள்.

Theosophical Girls' School-ல் பிரின்ஸிபாலாயிருக்கும் மிஸ் பால்மர் அம்மாள் மிகுந்த உத்ஸாகத்துடன் உழைத்துவருகிறார்கள். ஷை பள்ளிக்கூடத்திலிருந்து சென்ற வருஷத்தில் 6 பெண்பிள்ளைகள் மெட்ரிகுலேஷன்

பரீக்ஷைக்குப் போனதில் 5 பிள்ளைகள் தேறினார்கள். அதில், 1 பிள்ளை முதலாவது வகுப்பில் தேறியிருப்பதாகத் தெரியவருகிறது.

---

பிரஹ்மக்ஞான சபையில் சேர்ந்த மெம்பர் ஒருவர் பூனாவில் அதுபோல் ஒரு Theosophical School ஸ்தாபிக்கவேண்டியதை உத்தேசித்து அதற்காக முதலாவது நன்கொடையாக இருபதினாயிரம் ரூபாய் கொடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

---

பரோடா ராஜாங்கத்தில் பிறந்த பிள்ளைகளை ஆணாகட்டும் பெண்ணாகட்டும், கட்டாயப்படுத்தி Primary classes முடியவாவது சம்பளமில்லாமல் ராஜாங்கத்தாருடைய செலவில் படிப்பித்து விடுகிறார்களாம். அதுவுமன்றி ஆண்பிள்ளைகளுக்கு குறைந்தது 14 வயசு வரைக்குமாவது பெண் பிள்ளைகளுக்கு 12 வயசு வரைக்குமாவது பள்ளிக்கூடம் போகும் வயசு என்று சட்டம் ஏற்படுத்தி யிருக்கிறார்களாம். இன்னும் சில வருஷங்களுக்குள்ளாக அந்த ராஜாங்கத்தில் படியாதவர்கள் அபூர்வமாய் விடுவார்கள் என்பதற்கு என்ன சந்தேகம்?

---

நியாயஸ்தலங்கள் என்று பெயர் வைக்கப்பட்டிருக்கும் கோர்ட்டுகளில் கக்ஷிக்காரர்களுக்கு ஏற்படும் மிகுந்த செலவையும், வியவகாரங்களை விசாரித்து தீர்மானம் செய்ய ஏற்படும் தாமசத்தையும், உண்மையைக் கண்டறிவதில் அந்த கோர்ட்டார்கள் படும் கஷ்டத்தையும் உத்தேசித்து பரோடா தேசத்தில் கிராம பஞ்சாயத்து கோர்ட்டுகள் ஏற்படுத்தி யிருப்பதும் தவிர; Conciliators அதாவது ராஜிசெய்து வைப்பவர்கள் என்று சிலரை நியமித்து 100 ரூ. மதிப்புக்குக் கீழ்ப்பட்ட ஒவ்வொரு வழக்குகளையும் முதலாவது அந்த Conciliator ஒருவரிடம் சொல்லிக் கொண்டு அவரால் சமாதானமாகத் தீர்த்து வைக்க முடியாவிட்டால் பிற்பாடு கோர்ட்டில் தாக்கல் செய்ய வேண்டுமென்றும் 100 ரூபாய் மதிப்புக்கு மேற்பட்ட வழக்குகளை கக்ஷிக்காரர்கள் இஷ்டப்படி Conciliator இடத்திலாவது கோர்ட்டிலாவது தாக்கல் செய்யலாம் என்றும் ஏற்பாடு செய்திருக்கிறார்களாம். அதனால், வழக்குகள் பெரும்பாலும் குடிகளுக்கு அதிக செலவின்றியும் தாமசமின்றியும் எளிதில் நியாயமாய் தீர்ந்து விடுகிறதாம்.

---

Yale என்னும் பட்டணத்தில் உள்ள ஸர்வகலாசாலையில் professor ஆக உள்ள ஒரு பெரிய Scientist ஒருவர், மனுஷியன் மாம்சம் சாப்பிட வேண்டியது அனாவசியம் என்றும் மாமிசம் சாப்பிடுவதைக்காட்டிலும் கரி காய் கிழங்கு தானியங்களைச்சாப்பிடுவதே மனுஷியனுக்கு நன்மையைப்பயக்கக் கூடியதென்றும் நிரூபணம் செய்ததாக Herald of the golden age என்னும் பத்திரிகையில் வெளியாயிருக்கிறது.

அஹிம்ஸையை உயர்ந்த தர்மமாகக் கைக்கொண்டவர்கள் ஜைனர்கள். புஷ்பிக்கும் காலங்களில் சோம்பலில்லாமல் புஷ்பம் தோறும் அலைந்து தேனைத் துளித்துளியாகச் சேர்த்து புஷ்பமில்லாத காலங்களில் தங்களுடைய ஆஹாரத்துக்காக வைத்திருக்கும் ஆயிரக்கணக்கான தேனீக்களை கொன்று தேனை கொள்ளையடித்து மனுஷியன் தேன் சாப்பிட வேண்டியிருப்பதால், தேன் சாப்பிடப்படாது என்பது அவர்களுடைய கொள்கையாம். "ஜைனமதக் கிரந்தமாகிய உதாஜஜைனம்" என்னும் புஸ்தகத்தில் ஒரு துளி தேன் சாப்பிட்டவன் ஏழு கிராமங்களை எரித்து சாம்பலாக்கினவனுக்குச் சமமான பாபியாகிறான் என்று சொல்லப்பட்டிருக்கிறதாம்.

---

சுத்தமாயும் வியாதியில்லாமலும் உள்ள மாடுகள் கொடுக்கும் பால் மட்டிலும் நமக்கு நன்மையைச் செய்யும். அப்படிக்கில்லாத மாடுகளின் பாலை உட்கொள்வதால் மனிதர்களுக்கு,முக்கியமாய் குழந்தைகளுக்கு பலவிதமான ரோகங்கள் உண்டாகின்றன. அதற்காக மாடுகள் கட்டும் இடம் அசுத்தம் தங்காமல் பார்ப்பதும், மாடுகளுக்கு சுத்தமான ஆகாரம் கொடுப்பதும், மாடுகளை அழுக்கில்லாமல் சுத்தப்படுத்துவதும் முக்கியமாகும். ஆகையால், மாடு வளர்த்து நல்ல தயிர் பால் நெய் வியாபாரம் செய்யும் தொழிலை, படித்தவர்கள் கைக்கொள்ளும் பொருட்டு மைசூர் சமஸ்தானத்தில் அப்படி பிரவிர்த்தி செய்பவர்களுக்கு கட்டிடம் கட்டவும் மேய்ச்சல் தரைக்காகவும் ஒவ்வொருவருக்கும் 5 ஏகர் வரை இனமாகக் கொடுப்பதாயும் பொருளுதவி செய்வதாயும் ஏற்பாடு செய்திருக்கிறார்களாம்.

---

அமெரிக்காவில் Clenetand என்னும் இடத்தில் உள்ள Saint Ignatius Uuiversity என்னும் ஸர்வகலாசாலையில் Physics Professor Father Oldenbach என்பவர் நம்முடைய சரீரத்தில் தலை யட்டிலும்,ஸமகாத்திரமான ஜலத்தைக் காட்டிலும் பளுவான தென்றும், மற்ற அவயவங்கள் லேசான தென்றும், ஆகையால் Bicycle ஏறி விழாமல் போக நாம் எவ்வளவு எளிதில் கற்றுக்கொள்கிறோமோ அவ்வளவு எளிதில் ஜலத்தின் பேரில் நடக்கக் கற்றுக் கொள்ளக் கூடும் என்றும் சொல்லி ஒரு பெரிய ஜனக்கூட்டத்தின் முன்பாக ஜலத்தின் பேரில் நடந்து காட்டினாராம்.

---

நாம் எப்படி Telephone தந்திக் கம்பி வழியாக அனேக மைல்களுக்கு அப்பால் உள்ள சப்தத்தை இங்கே கேட்க சாத்தியப்படுகிறதோ, அதுபோல அனேகம் மைல்களுக்கு அப்பால் உள்ள ரூபத்தை கம்பி வழியாய் இங்கே பார்ப்பது சாத்தியப்படும் என்று சொல்லித் தான் அதற்காக புதிதாய்க்கண்டுபிடித்த ஒரு யந்திரத்தைக் கொண்டு London நகரத்தில் Consulting Engineer ஆக வுள்ள Doctor M. A. Low என்பவர் 4 மைலுக்கு அப்பால் உள்ள ரூபத்தை தந்திக்கம்பிக் வழியாகக் கூடியிருந்த ஜனங்களுக்குக் காண்பித்தாராம்.

110

# A CATALOGUE OF TAMIL BOOKS
OBTAINABLE AT

## *The Theosophist Office*
**Adyar, Madras, India.**

---

அடையாறு, மதிராஸ், தியாஸபிஸ்டு ஆபீசில் கிடைக்கும்

வேதாந்தம், மதம், முதலிய விஷயங்களைப் பற்றின

தமிழ்ப் புஸ்தகங்கள்.

---

ஸ்ரீ பகவத்கீதை, தமிழ் கிரந்தாக்ஷரங்களில் மூலமும், பாஷ்ய, தாத்பர்ய சந்திரிகாநுசாரித்து அ. அநந்தாசார்ய ஸ்வாமிகளால் ப்ரதிபத அர்த்தமும் தாத்பர்யமும். (Bhagavat Gita, with notes & meanings by A. Ananthachariar) ... 1 4 0

ஸ்ரீ பகவத்கீதை, ப்ரதிபத டீகா தாத்பர்ய பாஷ்யத்ரய சாரத்துடன், அப்பாயிநாயிடு அவர்களால் பதிப்பிக்கப்பட்டது. (Bhagavat Gita by Abboyi Naidu Garu) ... ... 1 0 0

ஆரியர் சன்மார்க்கச் சுருக்கம், டி. ர. இராஜரெத்தின முதலியாரால் ஸம்ஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது. (An Epitome of Aryan Morals, by T. R. Rajaratnam Mudaliar.) ... ... ... 0 1 0

மார்க்க விளக்கம், ஞானதசையை யடைய விரும்புகிறவர்களுடைய உபயோகத்தின்பொருட்டு இந்நூல் எழுதப்பட்டது. மொழிபெயர்ப்பு. (Light on the Path by M. C.) 0 1 0

ஸநாதன தர்ம பிரச்னோத்தரம், ஹிந்து தர்ம நீதிகளை பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் வினாவிடை (தபாற்கூலி அணா ½) (Sanatana Dharma Catechism) ... 0 1 0

ஸநாதன தர்மம் காசிப்பிரதான ஹிந்து வித்தியாசாலைக் கமிட்டியாரால் பிரசுரம் செய்யப்பட்ட புஸ்தகத்தின் மொழிபெயர்ப்பு. (Elementary Text book of Hindu Religion & Morals by C. H. C. Commiite.) ... ... 0 12 0

பிரஹ்மக்ஞான ஸங்கிரகம். ஸி. டப்ளியூ லெட்பீடர் அவர்கள் இயற்றியது. ஜி. சாம்பசிவ ஐயரால் மொழிபெயர்க்கப்பட்டது. (Outlines of Theosophy by C. W. Leadbeater.) 0 6 0

பிராசீன தர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும். மொழிபெயர்ப்பு (Ancient Ideals in modern Life by Annie Besant) .... .... ... 0 6 0

ஜீவனும் மரணத்திற்குப்பின் ஜீவனுடைய ஸ்திதியும். அனி பெஸன்ட் அம்மை அவர்கள் உபந்நியாசத்தினின்று வி இராமசந்திர நாயுடு அவர்களால் மொழி பெயர்ப்பு. (Life & Life after-death by V Ramachandra Naidu Garu) ... 0 1 0

மனிதன் வம்சாவளியின் உண்மை, பெஸன்ட் அம்மையார் செய்த உபந்நியாசத்தினின்று ப. நாராயண ஐயரால் மொழிபெயர்ப்பு. (The Pedigree of man by Annie Besant.) ... 0 8 0

மோக்ஷமார்க்கத்ரயம், பெஸன்ட் அம்மையாரது உபந்நியாசங்களினின்று மொழிபெயர்ப்பு. (The Three Paths by Annie Besant.) ... ... ... 0 8 0

அவதாரங்கள், பெஸன்ட் அம்மையாரது ஆங்கில உபந்நியாசங்களினின்று மொழிபெயர்ப்பு, (Avataras by Annie Besant) 0 8 0

இராமாயணஸாரம். முதற்பாகம். செய்யூர் முத்தைய முதலியார் இயற்றியது. (Ramayanasara, by Muthiah Mudaliar.) ... ... ... 0 10 0

ஹிந்துமத தூஷணையின் பரிகாரம், பெஸன்டு அம்மையார் இயற்றியது. மொழிபெயர்ப்பு (In Defence of Hinduism by Annie Besant.) கார்ட் பைண்ட் ... 0 4 0

ஷை காகிதம் பைண்ட் ... 0 3 0

நாமிருக்கும் வீடு. ஆத்மாவும் அதன் கோசங்களும். (Namirukkum Veedu or the House we live in.) 0 0 6

யக்ஞம், அதன் உண்மை. (Yagna & its truth) 0 1 0

குரு சிஷ்ய சம்பந்தம், அதன் உண்மை. (Guru & Sishya.) ... ... 0 0 6

மநீஷா பஞ்சகம், ஸ்ரீ சங்கராசாரியர் அவர்கள் அருளியது. நாராயணஸ்வாமி ஐயரால் மொழிபெயர்ப்பு. (Manishapanchaka, of Sri Sankara, Translated by Narayanaswami Aiyar.) ... ... 0 1 0

பராசர ஸ்மிருதி. (தபால் சார்ஜ் 0 3 0.) Parasara Smriti ... ... ... 1 4 0

ஸந்தியாவந்தனம், புருஷஸூக்தம் முதலிய ஸூக்தங்களும் விஷ்ணு ஸஹஸ்ர நாமம் மூலமும் அநந்தாசாரியர் அவர்களால் மொழிபெயர்ப்பும். (Sandhyavandana & other Suktas & Vishnusahasranama, text & translation by Anantha-Char தபால் சார்ஜ் 0 3 0 ... 1 4 0

தசாவதாரப்ரபாவம் (Dhasavatharaprabhavam)

ஸ்ரீ க்ருஷ்ண சைதன்யஸ்வாமிகள் சரித்திரம், பக்தவத்சலம் வெங்கட ஸ்ரீநிவாசன் அவர்களால் இயற்றப்பட்டது. துணி பைண்ட் ... ... ... 2 8 0

ஷை போர்ட்பைண்ட் ... 2 0 0

(Life & Teaching of Sri Krishna Chaitanya by Venkata Srinivasan.)

ஏசுகிறிஸ்து என்பார் ஒழுகிக்காட்டிய ஒழுக்கமுறை நூல். (Imitation of Christ) ... ... 1 0 0

வர்ணவைத்திய சாஸ்திரம். (தமிழ் மொழிபெயர்ப்பு.) (Chromopathy by a Siva Rao) .... 0 8 0

இந்து தேசத்தின் சென்றகாலம், நிகழ்காலம், வருங்காலங்களின் நிலைமைகள், கர்னல் ஆல்காட்துரையவர்கள் இந்த விஷயமாய் செய்த உபந்நியாசங்களின் சாரம். (India PAST, PRESENT, & FUTURE, by Col. H S. Olcott.) ... 1 0 0

ராதா ராணி. (அருமையான தமிழ்க்கதை) Radharani 0 2 0

போஜ சரித்திரம், சித்திரங்கள் சேர்ந்தது. டி. எஸ். நாராயண சாஸ்திரியர் இயற்றியது. (Bhoja Charitram by T. S. Narayana Sastriar.) ... ... 1 8 0

வேதாகம உண்மை (Vedagama Unmai. The truth of Vedas and Agamas.) ... ... 0 1 0

தேவோபாசனதீபம் முதற்பாகம். (Devopasanadeepam or the Light of Divine worship, Part I.) ... 0 8 0

முக்தி சோபானம். (Muktisopanam.) ... 0 8 0

விபூதி ருத்ராக்ஷதாரண நிருபணம். (Vibhutirudrakshadharana Nirupanam.) ... க்ளாத் 1 0 0

போர்ட்டு 0 14 0

ஈசாவாஸ்ய உபநிஷத்து. மூன்று பாஷ்யங்களுடன். ஏ. சிவராயரால் மொழிபெயர்ப்பு. (Isvasyaopanished by A Siva-Rao) ... ... ... 1 8 0

கேனோப நிஷத்து. மூன்று பாஷ்யங்களுடன் ஏ. சிவராயரால் மொழி பெயர்ப்பு. (Kenopanishad by A. Sivarao 1 8 0

தைத்திரீய உபநிஷத்து. மூன்று பாஷ்யங்களுடன் ஏ. சிவராயரால் மொழிபெயர்ப்பு. (Taittiriyopanishad by A Siva Rao) 6 0 0

பிரஹ்ம சூத்திரார்த்த தீபிகை. ஸ்ரீசங்கராசாரியார் பாஷ்யத்துடனும் ஆநந்தகிரீயம், முதலிய வியாக்கியான சுருக்கத்துடனும் ஏ. சிவராயரால் மொழிபெயர்ப்பு. (Brahmasutrartadipika by A. Siva Rao.) 9 பாகம். பாகம் விலை 12 அணா. 6 12 0

சங்மார்க்க தீபம். ப. நாராயண ஐயர் அவர்களால் விசேஷகுறிப்புரைகளுடன் மொழிபெயர்ப்பு. (Light on the path, translated by P. Narayana Aiyer with notes ... 0 2 0

ஸர்வ ஸமய ஐகமத்ய ஸார ஸங்கிரகம். ப. நாராயண ஐயர் அவர்கள் மொழிபெயர்ப்பு. (The Universal Religious Text book. Part I. Religion translated by P. Narayana Aiyar ... ... ... 0 4 0

அந்நிபெஸன்டு அம்மையார் சரித்திரச் சுருக்கம். (ப. நாராய ண ஐயர்). Life of Mrs. Annie Besant in tamil by P. Narayana Aiyer ... ... ... 0 1 0

ஜாதி தேகவிளக்கம். ஜி. பரஞ்சோதி செட்டியாரால் மொழிபெயர்ப்பு. (Man & his bodies by Annie Besant) 0 10 0

சத்குரு சரணஸந்நிதி.(At the Feet of the master) 0 3 0

சிராத்தம். (Sraddham) ... 0 0 3

மஹாத்மாக்களும் அவர்களையடையும் மார்க்கமும்.
(The Masters & the Path to them). 0 0 6

சன்மார்க்க சபையை நடத்தும் முறை.
(How to work a lodge.) ... 0 0 3

வெள்ளியம்பலம். (White Brotherhood.) 0 1 0

தேவாலயம். (Devalayam.) ... 0 0 3

இந்திய புத்திரர்களின் சங்கம்.

1. புத்திரர்கள் செய்யும் உறுதிமொழி ... 0 0 3
2. புத்திரிகள் செய்யும் உறுதிமொழி ... 0 0 3

(The sons & daughters of India-pledges of).

டெல்லி தாபார். (Delhi Durbar) ... 0 1 0

பதஞ்சலீயோக ஸூத்திரம் (ப. நாராயண ஐயரால் மொழிபெயர்ப்பு. (குறிப்புரைகளுடன்.)
(Patanjaliyoga Sutras.) ... 1 0 0

மறந்துபோன சில ஆரியமத உண்மைகள், தமிழ் மொழிபெயர்ப்பு மகா-ா-ா-ஸ்ரீ தி. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்களால் செய்யப்பட்டது. பரோபகாரச்சிந்தை உள்ளவர்கள் இதை பரவச்செய்தல் மிக நலம் ... ... 0 2 6